www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

1—15 [illegible] '94

3 _ 16

விலை ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



www.padippakam.com

# வறுமையின் கோரம்

## உழைப்பாளி பெண்கள் விற்பனை

பஞ்சம் பிழைக்க, பெரும்பாலான விவசாயிகள் நாடோடிகளாக நகர்ப்புறத்துக்கு ஓடி வருவதை நாம் தினமும் காண்கிறோம். ஆனால் வறட்சியின் கொடுமையால் அண்டை மாநிலங்களுக்கு ஓடிய விவசாயிகள்—பழங்குடிகள் அங்கேயும் பிழைக்க முடியாமல், பசிக் கொடுமையால் தங்கள் மனைவியையும் வயசு பெண்களையும் விற்கும் கொடுமை இப்போது வெளியில் வந்துள்ளது.

'மோண்ட பாட்டாஷ்' என்றழைக்கப்படும் ஒரிசா-கஞ்சாம் மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடிகள், சில பத்தாண்டுகளுக்கு முன் ஆந்திராவிலிருந்து பஞ்சம் பிழைக்கப் போனவர்கள் போன இடத்திலும் பிழைப்புக்கான நிரந்தர தொழில் எதுவும் இல்லாமல் கொத்தடிமைகளாக உயிர் வாழ்ந்தனர். குடும்பத்து நபர்களை அடமானம் வைப்பது, பெற்ற குழந்தைகளை விற்பது என்பதாக இருந்த அவர்களது வாழ்க்கை இப்போது தங்கள் மனைவிகளையும், வயசு பெண்களையும் விற்று உயிர் வாழ வேண்டிய கொடுமைக்கு தாழ்ந்துள்ளது. லட்சுமி; வயது 16. ஒரிசா கஞ்சாம் மாவட்டம் காந்தரபள்ளி கிராமம்;சன்யாவின் மூன்றாவது மனைவி. சமீபத்தில்தான் இவரை ரூபாய் 300க்கு விலைக்கு வாங்கியிருக்கிறார் சன்யா.

அவருடைய முதல் இரண்டு மனைவிகளும் கூட இப்படி விலைக்கு வாங்கப்பட்டவர்கள் தான். ஆனால் அவர்களை மிகவும் குறைந்த விலைக்கு (ரூபாய் 100க்கும் குறைவு) வாங்கியதால் அவர்களுடைய பெற்றோர்கள் வாங்கிய பணத்தை கொடுத்து விட்டு தங்கள் வீட்டுக்கே அழைத்துச் சென்றுவிட்டனர். இப்போது அப்பெண்கள் அதிக விலைக்கு வாங்க வரும் நபர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். காந்தா, வயது 25. ஆறு மாதங்களுக்கு முன் அதே ஊரைச் சேர்ந்த பஞ்சபத்ரோ என்பவர் 60க்கு இவரை விலைக்கு வாங்கியிருக்கிறார். காந்தா இவருக்கு நான்காவது மனைவி. முதல் இரண்டு மனைவிகள் இறந்துவிட்டனர். மூன்றாவது மனைவி பசிக் கொடுமையால் இவரிடமிருந்து பிரிந்து சென்றுவிட்டார்.

இவ்வாறு ஒருவர் இருவரல்ல. 10,000க்கும் அதிகமான அப்பழங்குடிகளில், பெரும்பாலானோர் குறிப்பாக பெண்கள் பல பேருக்கு மனைவியாக கடைசி வரை பந்தாடப்பட்டு மிருகத்திலும் கீழாக வாழ்ந்து வருகின்றனர். இதனால் கணவன்-மனைவி, குடும்பம், குழந்தைகள் என்ற பந்தபாசமெல்லாம் அறுத்தெறியப்பட்டு குழந்தைகளின் மனநிலையும் பாதிப்புக்குள்ளாகிறது. மொத்த சமூகமே பழைய காட்டுமிராண்டிகளின் வாழ்க்கைக்கு திரும்புகிறது.

ஆனால் அம்மாநிலத்தை ஆளும் காங்கிரசு கட்சியின் முக்கிய தூணும், ராஜீவின் உற்ற நண்பருமான ஆபாச வக்கிர கோமாளி ஜே. பி. பட்நாயக்





''இம்மாதிரியான கதைகள் வெறும் அண்டப் புளுகு. ஏனென்றால் நாங்கள் அப்பகுதிகளில் வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமுலாக்கி வருகிறோம்'' என்கிறார். அதிகாரவர்க்க ஒட்டுண்ணி கூட்டமோ ''நாங்கள் அப்பகுதிகளில் நேரிடையாகவே விசாரணைகள் மேற்கொண்டோம். அம்மாதிரி எதுவுமே இல்லை'' என பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுக்கின்றனர்.

அதே பகுதியைச் சேர்ந்த ஆஸ்கா தொகுதி காங்கிரசு எம் எல். ஏ. மூன்றாண்டுகளுக்கு முன்பே இப்பிரச்சினையை சட்டமன்றத்தில் எழுப்பியிருக்கிறார். அவரே சென்ற ஆண்டும் இக்கொடுமையைப் பற்றி கேள்வி எழுப்பியிருக்கிறார். ஆனால் அதற்கான பதிலை மட்டும் தன் சொந்த கட்சிக்காரர்களிடமிருந்தே அவரால் பெற முடியவில்லை.

தற்போது பரவலாக நடக்கும் மனைவிகள், வயசு பெண்கள் விற்பனைக்கான காரணமாக ''குடும்ப உறுப்பினர்களை கொத்தடிமைகளாக அடமானம் வைத்தால் மீண்டும் அவர்களை மீட்கவோ சொந்தம் கொண்டாடுவதோ முடிவதில்லை. எனவே நேரிடையாக விற்றுவிடுகின்றோம்'' என்று துயரத்துடன் கூறுகின்றனர் உள்ளூர் வாசிகள்.

பழங்குடிகளிடம் இருக்கும் பிற்போக்கு குடும்ப உறவுகள், கலாச்சாரம் ஒருபுறம்; தொடர்ச்சியான பஞ்சம்-பட்டினி, வறுமை மறுபுறம். இவை இரண்டும் பின்னிப்பிணைந்து பழங்குடிகளை காட்டுமிராண்டி கால கலாச்சாரத்திற்கு இழுத்து செல்கின்றன.

கல்வியறிவின்மை, பெண்ணடிமைத்தனத்தை ஒழிப்பது பற்றி விண்ணதிர முழங்கும் ஓட்டுப் பொறுக்கிகளும், அதிகார வர்க்கத்தினரும் கண்ணெதிரே காட்டுமிராண்டிகளாக மாறிக் கொண்டிருக்கும் உழைப்பாளி மக்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

தன் மனைவியை சூதாட்டத்தில் இழந்த தருமன் கதையை நாம் மகாபாரதத்தில் கேட்டிருக்கிறோம். ஆனால் 21ஆம் நூற்றாண்டின் நவீன யுகத்தை நோக்கிச் செல்லும் பாசிச ராஜீவின் ஆட்சியிலோ உழைக்கும் மக்கள் இயற்கையோடு நடத்தும் சூதாட்டத்தில் தொடர்ச்சியாக தோல்வியுற்று பஞ்சம், பசி, பட்டினி கொடுமைகளுக்கு ஆளாகி கடைசியில் சொந்த மனைவியையே இழக்கும் நவீன தருமர்களாக மாறி வருகிறார்கள். சொந்த நாட்டு மக்களை ராஜீவ் கும்பல் அழைத்து செல்லும் 'முன்னேற்ற' பாதை இதுதான்.

● குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

16

1—15 ஜூலை '88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# சங்கராச்சாரி வாய்க்கொழுப்பு!

வாய்திறந்தாலே நஞ்சு கக்கும் மனித மிருகம் பூரி சங்கராச்சாரி நிரஞ்சன் தேவ் தீர்த் தொடர்ந்து நஞ்சு உமிழுகிறது. நாட்டின் தீராத அவமானச் சின்னமான இந்து மதத்தின் அங்கங்களாகிய தீண்டாமை என்னும் சாதி—சமூக ஒடுக்குமுறையையும் சதி என்னும் உடன் கட்டை ஏறும் முறையையும் மீண்டும் மீண்டும் நியாயப்படுத்திப் பேசிவருகிறது.

ராஜஸ்தான், உதய்ப்பூர் மாவட்டம் நாத்வாராவில் உள்ள ஸ்ரீநாத்ஜி ஆலயத்துக்குள் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி பூரி சங்கராச்சாரி கூறும்போது ''சாதிகள் மத அடிப்படையிலானவை. மத ஆச்சாரப்படி அரிசனங்கள் கோவில்களுக்குள் நுழையமுடியாது. அனுமதிக்கவும் கூடாது. ஒரு பிராமணனோடு ஒப்பிடக்கூடிய தகுதியுடைய ஒரு அரிசனனையாவது காட்டுங்கள் பார்ப்போம்?'' என்று பத்திரிக்கை நிருபர்களிடம் திமிராகக் கேட்டிருக்கிறார்.

நிருபர்கள் அம்பேத்காரின் பெயரைக் கூறியபோது, ''அவரால் அரசியல் நிர்ணய சட்டத்தில் 540 தவறுகள் நேர்ந்துள்ளன என்று சட்டவல்லுநர்கள் கூறியுள்ளனர்'' என்று சொல்லியிருக்கிறார். கேரளத்திலும் காஷ்மீரிலும் உள்ள முற்போக்கு இயக்கங்களும் ஆரிய சமாஜமும் தாழ்த்தப்பட்டவர்களையும் பெண்களையும் புரோகிதர்களாக்கியிருப்பது பற்றி கேட்டபோது, ''அவர்கள் இந்து மத வேத—சாஸ்திரங்களைச் சிதைத்துவிட்டார்கள்.'' என்று சொல்லிச் சீறியிருக்கிறார்.

''வேத சாஸதிரங்களின்படி உடன்கட்டை ஏறுவது கணவனை இழந்த பெண்கள் மோட்சத்துக்குப் போகும் வழியாகும்'' என்று மீண்டும் அந்த காட்டுமிராண்டித்தனத்தை நியாயப்படுத்தியிருக்கிறார். ''கணவனை இழந்த பெண் உடன்கட்டை ஏறுவது அல்லது விதவையாகவே வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை'' என்று சபித்திருக்கிறார்.

''உலகிலேயே இந்துக்களுக்கு எதிராகத்தான் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன; இந்துக்களின் நலன்களைக் காப்பதற்காக நான் அரசியலில் குதிக்கும் வாய்ப்பை மறுக்க முடியாது. இந்துக்களின் உரிமைக்காகப் போராடும் ராமராஜ்ய பரிக்ஷத் என்கிற அரசியல் அமைப்பை மீண்டும் உயிர்ப்பிக்க முயலுகிறேன்'' என்று எதிர்காலத் திட்டம் பற்றியும் கூறியுள்ளார்.

பூரி சங்கராச்சாரி என்கிற ஒரு நபர் மட்டுமல்ல; தீண்டாமை, உடன்கட்டை போன்ற காட்டுமிராண்டித்தனங்களை கட்டிக்காக்கும் ஒரு பெரிய கூட்டமே இந்த நாட்டில் வாழுகிறது. சட்டப்படி அவை தடை செய்யப்பட்டிருந்தபோதும் அரசின் மறைமுக ஆதரவும் அதற்கு உண்டு. காஞ்சி சங்கராச்சாரி நாகபுரிக்குப் போயிருந்தபோது சதியை ஆதரித்தும் பேசிவிட்டு காஞ்சி திரும்பியதும் மறுப்பறிக்கைவிட்டார். நாகபுரி நிருபர்கள் இந்த சங்கராச்சாரியின் பித்தலாட்டத்தைக் கண்டித்துள்ளார்கள்.

சென்ற ஆண்டு ராஜஸ்தான்—தேவ்ராலா கிராமத்தில் சதி என்கிற பெயரில் 25 வயது இளம் பெண் ரூப் கன்வர் உயிரோடு கொளுத்தப்பட்டார். மாநில ஜனதா ஆட்சி தலைவர் கல்வி தலைமையில் பாரதீய ஜனதா, லோக்தளம், காங்கிரசு போன்ற எல்லா ஆளும் வர்க்கக் கட்சிகளின் உள்ளூர் தலைவர்களும் சதியை ஆதரித்து பங்கேற்றனர். ராஜஸ்தான் மாநில காங்கிரசு அரசு, சதிக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பைக் கிடப்பிலேயே போட்டுவிட்டு சதி சடங்குகளைத் தடுக்கத் தவறியது.

தீண்டாமை என்கிற சமூகக்கேடு நாடெங்கும் விரவிக் கிடப்பதோடு தாழ்த்தப்பட்டமக்கள் விழிப்புறும் இடங்களில் எல்லாம் உயிரோடு கொளுத்தப்படுகிறார்கள். சதி என்கிற பெயரில் பெண்களைப் படுகொலை செய்வது உச்சபட்சம் என்றால் பெண்களை விற்பது, வரதட்சிணைக் கொடுமை செய்து உயிரோடு எரிப்பது, குழந்தைகளை நரபலியிடுவது என்று பல்வேறு மட்டங்களில் காட்டு மிராண்டிததனம் நிலவுகிறது. இந்த காட்டு மிராண்டித்தனங்கள் எல்லாம் இந்து மத—இந்து சமூகக் கொடுமைகள் தொடர்வதையே குறிக்கின்றன. இந்து மதம் என்பது பார்ப்பனீய மதம். பார்ப்பனர்கள் உருவாக்கியது. தமது மூதாதையர் வழியிலேயே பார்ப்பனிய மதத்துக்கு வேத சாஸ்திர வியாக்கியாணம் செய்து சங்கராச்சாரிகள் கட்டிக்காக்க முயலுகிறார்கள். ஆர். எஸ். எஸ். — பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் பிற இந்து மத நிறுவனங்கள் அதே பார்ப்பனீய மதத்தை சீர்திருத்தி வைத்துக் கொள்ள முயலுகின்றன.

பூரி சங்கராச்சாரி ஒரு தனி மனிதனல்ல. காட்டுமிராண்டிக்தனமான இந்துமத—பார்ப்பனீய வெறியின் பிரதிநிதி. சீர்திருத்த இயக்கங்களும் புரட்சி இயக்கங்களும் பாடுபட்டு ஏற்படுத்திய விழிப்புணர்வை மழுங்கடிக்கவும், ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பறிக்கவும் கிளம்பியுள்ள பழைமைவாதத்தின் குரல். இன்னமும் இந்து மதத்தில் அதன் சனாதன தர்மத்தில் நம்பிக்கை கொண்டிருப்பது உழைக்கும் மக்களின் சுயமரியாதைக்கே இழுக்கு, அவமானம். எனவே இந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டு பார்ப்பனீய இந்து மதத்தில் உழைக்கும் மக்கள் இருக்கக் கூடாது. வெளியேறவேண்டும். சங்கராச்சாரிகளின் மதவெறிக் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து கொடும்பாவிகள் கொளுத்தவேண்டும். தெருமுனைகளிலே மதவெறியர்களின் உருவங்களை செய்துவைத்துசெருப்பு மாலைகள்அணிவித்து ''கௌரவி''க்க வேண்டும்!

படிப்பகம்

www.padippakam.com

## பஞ்சாப்-போஃபர்ஸ்-இடைதேர்தல் முடிவுகள்:

# ராஜீவை இறுக்கும் மூன்று முடிச்சுகள்

● எட்டு மாநிலங்களில், ஏழு நாடாளுமன்றத் தொகுதிகளிலும் பதினொரு சட்டமன்றத் தொகுதிகளிலும் நடந்து முடிந்த தேர்தல்களின் முடிவுகள்.

● போஃபர்ஸ் பீரங்கி பேரலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை ஒரு வழியாக அமுக்கித் தப்பித்துக் கொண்டதாக எண்ணிப் பெருமூச்சு விட்ட சமயத்தில் மூன்று தவணைகளில் 'இந்து' நாளேடு வெளியிட்ட புதிய ஆதாரங்கள்.

● பொற்கோவிலின் மீது வெற்றிகரமான முறையில் ''கோடையிடித் தாக்குதல்'' நடத்தி இந்துக்களின் ஆதரவைப் பெற்று விட்டதாகக் கருதிக் கொண்டிருக்கும் போது அரியானா-குருச்சேத்திரத்திலும், டில்லி திலக் நகரிலும், பஞ்சாப்-அமிர்தசரசிலும் குண்டு வெடித்துப் பலர் உயிர் இழந்தது உட்பட பன்மடங்கு அதிகரித்துள்ள சீக்கிய மதவெறி பயங்கரவாதக் கொலைகள்.

—ஆகிய மூன்றும் பாசிச ராஜீவ் கும்பலை நிலை குலையச் செய்து விட்டன. எதற்கும் நிலை குலையாத அசகாய சூரர்கள், குற்றச்சாட்டுகளுக்கும், தாக்குதல்களுக்கும் அஞ்சாத கடமை வீரர்கள் என்பதாக பாசிச ராஜீவ் கும்பல் ஏற்படுத்த முயலும் தோற்றத்தைத் தவிடு பொடியாக்கி விட்டன. இந்த இடைத் தோதல்களுக்கு முன்பு பொற்கோவிலின் மீது 'கோடையிடித் தாக்குதல்' தொடுத்ததற்கு முக்கிய காரணங்களில் ஒன்று இந்துக்களின் நம்பிக்கை பெற்று ஓட்டுப் பொறுக்குவதுதான்.

ஆனால் பொற்கோவிலின் மீதான இந்தக் கோடையிடித் தாக்குதல் குளவிக் கூட்டைக் கலைப்பதாகும்; ''இப்போது தனது சிறப்புக் காவல் அதிரடிப் படையை அதி நவீன ஆயுதங்களுடன் ஏவி பொற்கோவிலை முற்றுகையிட்டு பயங்கரவாதிகளைவேட்டையாடுகிறது, பாசிச ராஜீவ் கும்பல். இந்தச் சண்டையில் பொற்கோவிலுக்குள் சிக்கியுள்ள பயங்கரவாதிகளை வேண்டுமானால் ஒழிப்பதில் வெற்றி பெறலாம். ஆனால் குளவிக் கூட்டைக் கலைப்பதன் விளைவாக பஞ்சாபிலும் சுற்றியுள்ள மாநிலங்களிலும் பயங்கரவாத நடவடிக்கைகள் பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்தோடு அதிகரிக்கும். அரசு பயங்கரவாதத்துக்கும் சீக்கிய மதவெறி பயங்கரவாதத்துக்கும் இடையே சிக்கி மேலும் பல சிவிலியன்கள் பலியானார்கள்'' என்று புதிய ஜனநாயகம் (16-31 மே 88) எழுதியது.

அதே போல பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாதிகளின் படுகொலைப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. அரியானா குருச்சேத்திரத்தில் வானொளியில் 'ராமாயணம்' தொடர் பார்த்துக் கொண்டிருந்த ஏழை மக்கள்-பெண்களும் சிறுவர்களும் உட்பட பலர் குண்டு வைத்துக் கொல்லப்பட்டனர். அதே போன்று டெல்லி-திலக் நகர் காய்கறிக் கடையிலும், அமிருதசரசு கடைவீதியிலும் குண்டு வெடித்து பல இந்துக்கள் மாண்டனர். சீக்கிய பயங்கரவாதத்தைக் காட்டி இந்துக்களின் ஓட்டுப் பொறுக்க எண்ணியது பாசிச ராஜீவ் கும்பல்; இப்போது சீக்கிய பயங்கரவாதிகளின் கோரத் தாக்குதல்களில் இருந்து ராஜீவ் ஆட்சியினால் தம்மைக் காக்க முடியும் என்கிற நம்பிக்கையை எல்லாத் தரப்பு மக்களும் இழந்து விட்டார்கள்.

சிறுபான்மை மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் காவலன் என்கிற வேடத்தைக் கலைந்துவிட்டு பெரும்பான்மை இந்துக்களின் காவல் தெய்வம்-அவதாரம் என்கிற அரிதாரம் பூசிக்கொள்வது என பாசிச ராஜீவ் கும்பல் முடிவு செய்து விட்டதை வேறு ஒரு வகையாலும் பார்க்க முடியும். வானொளி 'ராமாயணத்' தொடரில் ராமனாக வேஷங் கட்டிய நடிகர் அருண்கோவில் என்பவரை காட்டி ''ராமனைப் போல தெய்வமாக இளித்து ஆசிவழங்கி' ஓட்டுப் பொறுக்க எத்தனித்தது. 'ஹர ஹர மகாதேவா! ஸ்ரீராமச்சந்திராகி ஜே!' என்று சிறிதும் வெட்கமின்றி காங்கிரசு மந்திரிகளும் தலைவர்களுமே மேடைகளில் கூச்சல் போட்டனர். ஆனாலும் அவர்களுடைய தந்திரம் பலிக்கவில்லை. பெரும்பான்மையான இடங்களில் மண்ணைக் கவ்வினர்.

''நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் பீரங்கி பேரலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகள் முடிந்தன. குற்றச்சாட்டுகளை நிருபிப்பதற்கான ஆதாரங்கள் எதுவுமே கிடையாது'' என்று இரண்டு மாதங்களுக்கு முன்பாக மூட்டை கட்டி வைத்து விட்டு இடைத் தேர்தல்களை நடத்தியது பாசிச ராஜீவ் கும்பல். லஞ்ச

**அலகாபாத்: போபர்ஸ் ஊழல் பீரங்கி பொம்மைகளை வீதிகளில் வைத்து தேர்தல் பிரச்சாரம்**






படிப்பகம்

www.padippakam.com

ஊழல் குற்றச்சாட்டுகளை முக்கிய ஆயுதமாகக் கொண்டு எதிர்க் கட்சிகள் பிரச்சாரம் செய்த போதும், அமெரிக்க, ஜெர்மானிய சுவீடிஷ் பத்திரிகைகளிலும் குறிப் பாக 'இந்து' நாளேட்டிலும் பல ஆதாரங்கள் வெளி வந்த பிறகும் எருமை மாட்டின் மீது மழை பெய் தாற்போல பாசிச ராஜீவ் கும்பல் பாசாங்கு செய்தது. எப்படியாவது அக்கிரமங்கள் — தில்லுமுல்லுகள் செய்து தேர்தலில் வெற்றி பெற்று விட்டால் லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுகளை அமுக்கிவிடலாம் என்று மனக்கோட்டை கட்டினர். இடைத் தேர்தல்களில் அந்த மனக்கோட்டை சரிந்ததோடு இன்னும் பல புதிய ஆதாரங்களை 'இந்து' நாளேடு வெளியிட்டுள் ளது.

''இந்த இடைத் தேர்தல்கள் அவ்வளவு முக்கியமானவை அல்ல, சாதாரணமானவைதாம்'' என்று ஒருபுறம் அலட்சியம் செய் வதாக நடித்துக் கொண்டே மறு புறம் எப்படியாவது கணிசமான வெற்றி பெற்றுவிட வேண்டும் என்று எவ்வளவோ தேர்தல் தில்லுமுல்லுகளையும் அக்கிரமங் களையும் செய்து பார்த்துவிட் டது. தொகுதி வோட்டர்களின் சாதி—மத எண்ணிக்கை பார்த்து வேட்பாளர்களை நிறுத்தியது. கூடுமானவரை இடைத் தேர்தல் களுக்குக் காரணமாக இறந்து போனவர்களின் உறவினர்களை நிறுத்தி அனுதாப ஓட்டுப்பொறுக் க முயன்றது.

ஒரு தொகுதிக்கு 60 கோடி, 70 கோடி என்று நிதி ஒதுக்கித் திட்டங்கள் அறிவித்தது. அலக பாத் தொகுதியில் ஊர்க்காவல் படையினரையும் கிரிமினல் குற்ற வாளிகளையும் களத்தில் இறக்கி வோட்டர்களிடம் பயபீதியூட்டி யது. ராஜஸ்தான்-பாலி தொகுதி யில் வறட்சி நிவாரணத் தொழிலா ளர்களின் ஊதியத்தை முடக்கி வைத்து விட்டு ஓட்டுப் பதிவின் போது விநியோகித்தது. 'கஞ்சா-அபினி' சப்ளை செய்து வோட்டர் களைப் போதையில் தள்ளியது.

காங்கிரசின் எடுபிடிகளான அதிகாரிகளை தேர்தல் நடக்கும் தொகுதிகளுக்கு நியமனம் செய் தது. ஒவ்வொரு தொகுதிக்கும் ஏராளமான மத்திய மாநில மந் திரிகள், எம் பி கள், எம். எல். ஏக்களை ஒதுக்கி, கறுப்புப் பணத் தைக் கோடிக் கணக்கில் வாரி இறைத்து பிரச்சாரம் செய்தது. கத்தை கத்தையாகக் கள்ள ஓட்டுகள் அச்சிட்டனர். வாக்குப் பதிவு முடிந்து முத்திரை குத்தப் பட்ட ஓட்டுப் பெட்டிகளிலும் ஓட் டுச் சீட்டுகளைத் திணிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். ஓட்டுச் சாவடிகளைக் கைப்பற்றவும், கள்ள வோட்டுகள் போடவும் ஆயுதந்தாங்கிய குண்டர் படை களை ஏவினர். ஓட்டுச் சாவடி களைக் கைப்பற்றுவதிலும், கள்ள ஓட்டுப் போடுவதிலும், எச்சரிக் கையாய் இருந்து மோதி முறிய டிப்பதிலும் எதிர்க்கட்சிகளும் சளைத்தவர்கள் அல்ல. இதோடு மக்களின் ஆதரவு இழந்த நிலை யில் பாசிச ராஜீவ் கும்பலின் தோல்வி தவிர்க்க முடியாததாகி யது.

பயங்கரவாதப் படுகொலை கள், தேர்தல் தோல்விகள், லஞ்ச ஊழல் ஆதாரங்கள் ஆகியன இப் போது பாசிச ராஜீவ் கும்பலுக்கு பயபீதியூட்டியுள்ளன. மேலும் அதிகமான அளவில் அரசு பயங் கரவாத அடக்குமுறை மூலம் சீக்கிய மதவெறி பயங்கரவாதத் தை சமாளிப்பதற்கு அது முயலு கிறது. பொற்கோவிலைச் சுற்றி 30 மீட்டர் அகலத்துக்குள்ள கடை கள்-வீடுகளை இடித்துத் தள்ளி யும் பாகிஸ்தான்-பஞ்சாப் எல் லைப்புற கிராம-நகரங்களிலும் இதே போல செய்தும் பயங்கர வாதிகளைக் கட்டுப்படுத்தப் போவதாகக் கூறுகிறது. இதற்கு எதிராக மறியல் செய்த பெண் களையும் குழந்தைகளையும் பலாத்காரமாக அப்புறப்படுத்தி அவர்களிடையே பயங்கர பீதி யைப் பரப்பி வருகிறது.

ஆயுத பேர லஞ்ச ஊழலில் சிக்கியவர்களின் வளையம் சுருங் கிக் கொண்டே வருகிறது. அது பாசிச ராஜீவ் கும்பலை, பாசிச ராஜீவையே கழுத்தை இருக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. புதிய விசாரணை நாடகங்கள் மூலம் தனது பினாமி தரகர்களை பலிகடாவாக்கி விட்டுத் தப்பித் துக் கொள்ளவும் பாசிச ராஜீவ் கும்பல் தயங்காது. ஆனால் இம் மாதிரியான விவகாரங்களில் எதிரிகளை விட பங்காளிகளுக் கிடையிலான சண்டை-துரோகம் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி விடும் என்பதால் இன்னும் அவர் கள் நெருங்கி இருந்து ஒருவரை ஒருவர் காப்பாற்றிக் கொள்ள முயலுகிறார்கள்.

தேர்தல் முடிவுகளைத் தாம் ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்கிற மாதிரி நடித்தாலும் பாசிச ராஜீவ் கும்பலின் முகத்தில் சவக் களை தெரிகிறது. எதிர்க்கட்சி களை ஏசியும், உள்ளூர் தலைவர் கள் மீது பழி போட்டும் ஒரு சுற்று தமது சூரத்தனத்தைக் காட்டி னார்கள். மாநில முதல்வர்களை யும், கட்சி நிர்வாகிகளையும் புரட்டிப் போடுவதன் மூலம் தோல்வியை சரிக்கட்டி விட முடி யம், கட்சியின் தோற்றத்தைத் தூக்கி நிறுத்திவிட முடியும் என்று இப்போது நடவடிக்கையெடுக் கிறார்கள். முதல் பலியாக மகா ராஷ்டிர, உத்திரப்பிரதேச முதல் வர்களின் பதவிகளைப் பிடுங்கிக் கொண்டுள்ளனர். இது பாசிச ராஜீவ் கும்பலைப் பலப்படுத் தாது பலவீனப்படுத்தவே செய் யும். தேர்தல் தோல்விகளைக் காரணமாக வைத்துப் பதவி வேட்டைக்கு அலையும் போட் டிக் கும்பல்களுக்குத் தீனிபோடும் வேலையே இது. பதவியிழந்த கும்பல்களும், போதிய பங்கீடு கிடைக்காத கும்பல்களும் அடுத்த கட்ட மோதல்களுக்குத் தயாராகி விடும். ஊழல் பெருச்சாளிகள் போய் ஊழல் பன்றிகள் வருவ தைப் பெரிய மாற்றமாக மக்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

பஞ்சாப் பிரச்சினையில் பாசிச ராஜீவ் கும்பலுடன் ஒத் தூதினாலும், ஆயுத பேர லஞ்ச ஊழல் ஆதாரங்களை வைத்துக் கொண்டு, தமக்குள் ஏதாவது ஒரு வகையிலான கூட்டமைத்துக் கொண்டால் மீண்டும் ஆட்சி

போபர்ஸ் ஊழல்: 'இந்து' பத்திரிக்கை அம்பலப்படுத்திய புதிய ஆதாரங்கள்


THE HINDU
India's National Newspaper
Bofors "Pitco" payments linked to Hindujas
—documentary eviden

The secret Moineao-Moresco-Pitco deal
— more documentary evidence

From Chitra Subramaniam in Geneva and Our Special Correspondent in Madras

April 26.

A key document which the Joint Parliamentary Committee says it failed to get from Bofors on account of "the plea of commercial secrecy" has been made available to THE HINDU by privileged sources. The document, published here in facsimile, reveals the nature of the secret agreement concluded between Bofors and Moineao S.A. at Karlskoga on December 27, 1985 for the payment to the latter of "a cancellation fee" of 60 million Swedish ... "to be paid in instalments during 1986."

The "settlement agreement" is between Bofors and the mysterious front company which is described in the document as "a strategic consultant company" which, inter alia, "possesses know-how and marketing knowledge worldwide."

SETTLEMENT AGREEMENT

This Settlement agreement is entered into by and between AB Bofors, Karlskoga, Sweden (Bofors), and Moineau ...

Bofors is a Swedish Corporation which manufactures and sells ordnance material in Sweden and abroad.

Moineao is a Strategic Consultant company which possesses know-how and marketing knowledge worldwide ...

Bofors decided to cancel the earlier agreement between the parties. As they had no legal means ... agreement, the parties after lengthy ... order to avoid legal ... settlement ...

படிப்பகம்

www.padippakam.com



அமிர்தசரஸ் குண்டுவெடிப்பில் பலியானோரின் குடும்பத்தினர்

யைக் கைப்பற்றிவிட முடியும் என்கிற எதிர்க்கட்சிகளின் நப்பாசைக்கு இந்த இடைத் தேர்தல் முடிவுகள் நம்பிக்கையூட்டுகின்றன. இடப்பங்கீடு, கூட்டமைப்பு, திட்ட அடிப்படையிலான கூட்டணி, ஒரு கொடி-ஒரு சின்னம் அடிப்படையிலான ஒன்றுபட்ட கட்சி என்று பல மட்டங்களில் எதிர்க்கட்சியின் ஐக்கியம் பற்றிப் பேசுகிறார்கள். பாரதீய ஜனதாவை உள்ளடக்கிய ஜனநாயகக் கூட்டணி, போலிக் கம்யூனிஸ்டுகளை உள்ளடக்கிய முற்போக்கு ஜனநாயகக் கூட்டணி, இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரே கட்சி என்று பல கோரிக்கைகளிலும் எதிர்க் கட்சிகள் ஐக்கியம் பற்றிப் பேசுகிறார்கள்.

வாஜ்பாய், வி. பி. சிங், சந்திரசேகர், பகுகுணா, அஜித்சிங், ஹெக்டே, என். டி. ஆர். ஆகிய ஒவ்வொரு எதிர்க்கட்சித் தலைவரும் பிரதமர் பதவியைக் குறி வைத்து ஒருவரை ஒருவர் காலை வாரி விடுகின்றனர். 1977—79 ஜனதா முயற்சி சோகமாக முடிந்தது என்றால் இந்த முயற்சி கேலிக்குரியதாகவே முடியும். ஏனெனில் ஹெக்டே, என். டி. ஆர், தேவிலால் போன்ற பிராந்திய அளவிலான தலைவர்களைத் தவிர எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் அடியில்லாத மரங்கள். ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு பொதுவான கொள்கைகளோ, லட்சியமோ எதுவும் இவர்களுக்குக் கிடையாது.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் ஆகிய இரண்டு தரப்பினரின் ஆசைகளும் முயற்சிகளும் எப்படியிருந்த போதிலும் பஞ்சாப் பிரச்சினை, ஆயுதபேர லஞ்ச ஊழல்கள், இடைத் தேர்தல்கள் ஆகியன வேறுசில முக்கியமான உண்மைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

● பஞ்சாப் பிரச்சினையும், கூர்க்கா லாந்து, உத்திர கண்ட், ஜார்காண்ட், போடா ஆகிய மாநிலக் கோரிக்கைகளும் மேலும் மேலும் தீவிரமாகின்றன; வன்முறைப் பாதையில் தீர்வுக்கு முயலுகின்றன. எனவே இந்த சமூக அரசியல் அமைப்புக்களை வைத்து தற்போது கிளர்ந்துஎழுந்துள்ள சாதி, மத, இன, மொழி மற்றும் பிராந்திய அடிப்படையிலான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. தற்போதைய போலி ஜனநாயக அமைப்பின் கீழ் ஓட்டுப் பொறுக்குவதற்காக வேண்டி எல்லா அரசியல்கட்சிகளும்இந்தப் பிரச்சினைகளைப் பயன்படுத்தவே செய்வார்கள்.

● நேரு காலத்து டி டி. கே— முந்திரா ஊழல்கள், ராஜீவ் காலத்து ஆயுத பேர லஞ்ச ஊழல்கள் வரை ஆதார பூர்வமாக பல குற்றச்சாட்டுக்கள் வெளிவந்த போதும் இதுவரை எந்தக் குற்றவாளியும் தண்டிக்கப்பட்டதே இல்லை. ஆட்சியில் உள்ளவர்கள் தமது குற்றங்களை மூடி மறைக்கவும் குற்றஞ்சாட்டுபவர்கள் மீதே பாய்ந்து குதறவும் அரசு இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. போலீசும், உளவுப் படையும் அதிகாரவர்க்கமும் குற்றவாளிகளின் கூட்டாளிகளாக இருக்கும் அதே சமயம் நீதி அமைப்புகள் விசாரணைகள் என்கிற பெயரில் கண் துடைப்பு வேலைகள் செய்து ஏய்ப்பதற்கே பயன்படுத்தப்படுகின்றன. லஞ்ச ஊழல் என்கிற எரிபொருள் விழுங்கி இயங்கும் இந்த அரசு எந்திரம் குற்றவாளிகளைத் தண்டிக்காது. குற்றவாளின் ஆயுதமாகவே இயங்கும். எனவே லஞ்ச ஊழலை ஒழிக்கும் முதல் நடவடிக்கையாக இந்த அரசு எந்திரத்தை அடித்து நொறுக்க வேண்டும். அதாவது இந்த அரசு நிர்வாக அமைப்பு முறை தூக்கியெறியப் பட வேண்டும்.

● நடந்து முடிந்த இடைத் தேர்தல்கள் நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதையை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. வோட்டர்களிடையே பயங்கர பீதியைப் பரப்பி வோட்டுச் சாவடிகளை அண்ட விடாமல் விரட்டுவது; திடீரென்று ஆயுதந்தாங்கிய குண்டர்படை வந்து வோட்டர்களை அடித்து விரட்டிவிட்டு வோட்டுச் சீட்டுகளைப் பிடுங்கி முத்திரை குத்திப் போடுவது. வோட்டுப் பதிவுகள் தமக்குப் பாதகமாக இருந்தால் வோட்டுப் பொட்டிகளையே தூக்கிக் கொண்டு போய்விடுவது; இத்தனையையும் பார்த்துக் கொண்டு தேர்தல் அதிகாரிகளும் போலீசாரும் சும்மாயிருப்பது அல்லது அந்தக் குண்டர் படைக்கு உதவுவது; தேர்தல் முடிந்த பிறகு வோட்டு எண்ணுவதற்கு முன்பாக முத்திரைகளை உடைத்து கள்ளஓட்டுப் போடுவது; வோட்டு எண்ணும் அலுவலகங்களையும் கைப்பற்றி கள்ள ஓட்டுப் போட்டோ, தேர்தல் அதிகாரிகளை மிரட்டியோ தேர்தல் முடிவை மாற்றுவது; இந்த அக்கிரமங்கள்-தில்லுமுல்லுகளுக்குச் சாதகமான போலீஸ் மற்றும் அதிகாரவர்க்க எடுபிடிகளை விதிமுறைகளை மீறி நியமிப்பது; கிரிமினல் குற்றவாளிகளைத் தமது தேர்தல் வேலைக்காக விடுதலை செய்வது

இந்த அக்கிரமங்கள்-தில்லுமுல்லுகளைத் தேர்தல் கமிஷன் கண்டு கொள்வதில்லை; அல்லது இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் கமிஷன் கோரினால் அரசு அதை ஏற்பதில்லை; மீறி அக்கிரமங்கள் தில்லுமுல்லுகளைச் செய்கிறது.

— இதுதான் நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதை. வரம்புக்குட்பட்ட முறையில் இருந்த இவை இந்த இடைத் தேர்தல்களில் உச்ச கட்டத்தை அடைந்தன. எதிர்க்கட்சிகள், ஆளும்கட்சி இரண்டுமே இப்படிச் செய்தன. இதன் விளைவாக அரியானாவில் இரண்டு தொகுதிகள் மற்றும் காஷ்மீரில் ஒரு தொகுதி தேர்தல் முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த அக்கிரமங்கள் தில்லுமுல்லுகள் பற்றிய எதிர்க்கட்சிகளின் புகார்களை நிராகரித்தும், ஆளும் கட்சி புகார்களை ஏற்றும் தேர்தல் கமிஷனே ஒருதலைப்பட்சமாக இயங்குகிறது. இந்த போலி ஜனநாயகத்தின்படி யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்ல. இதுவே நாட்டின் பொதுவிதியாக உள்ளது. எனவே இனியும் இந்தப் போலி ஜனநாயகத்தை நம்ப முடியாது ●



படிப்பகம்

www.padippakam.com



# அடக்குமுறை-சுரண்டலுக்கெதிராய் ஆர்த்தெழும் தொழிலாளர்கள்

"ஐயோ, நாத்தம் தாங்க முடியலியே; கொடல புடுங்குதுப்பா வாடை!'' என்று மூக்கைப் பிடித்துக் கொண்டே வந்தமர்ந்தார் என் வீட்டிற்கு வந்த விருந்தாளி. அப்படி என்ன நாற்றமென்று கேட்கிறீர்களா? திருச்சி நகரிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் வந்து கேட்டுப் பாருங்கள். பச்சிளங் குழந்தைகூட சொல்லும், ''இது செந்தண்ணீர் புரத்திலுள்ள 'சாராயக் கம்பெனியின்' கழிவுநீர் வாடை'' என்று!

திருச்சி டிஸ்டிலர்ஸ் அண்ட் கெமிகல்ஸ் என்ற இந்தக் கம்பெனி கழிவுநீர் கிணறுகளிலும் நீருற்றுப் பெற்று குடிநீரும் நஞ்சாகிவிட்டது. விதியை நொந்து கொண்டு இங்குள்ள மக்கள் இந்நீரைத்தான் குடிக்கிறார்கள். சுற்றுச் சூழலை நஞ்சாக்கிய நிர்வாகத்தின் அயோக்கியத் தனத்தை எதிர்த்து பகுதிவாழ் மக்களும் தொழிற்சங்கங்களும் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து வெற்றியும் பெற்றனர். ஆனாலும் நிர்வாகம் இன்றுவரை கழிவுநீரை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சுற்றுப்புற பகுதிவாழ் மக்களுக்கே இந்த நிலைமை என்றால் இங்கு வேலை செய்யும் தொழிலாளிகள் உயிரைப் பணயம் வைத்து 'ஸ்பிரிட்' 'ஆசிட்' கார்பன்டை ஆக்சைடு திரவம் முதலானவற்றைத் தயாரிக்கிறார்கள். இதில் தப்பித் தவறி கைபட்டாலே கை வெந்துவிடும். ஆலையின் உள்ளே வீசும் அமில நெடி ஆளையே உருக்கிவிடும். முற்றிலும் பாதுகாப்பற்ற நிலைமையில் தான் தினமும் சராசரியாக 5 லட்ச ரூபாய் மதிப்புள்ள அமிலங்களை உற்பத்தி செய்து குறைந்தது இரண்டரை லட்ச ரூபாயை முதலாளிக்கு லாபமாக ஈட்டித் தருகிறார்கள்.

ஆனால் தொழிலாளிக்கு கிடைப்பதோ, இந்த அமிலங்கள் கையில் பட்ட வெந்த புண்ணுடன் மாதம் ரூ 300 அல்லது ரூ 400 தான். இத்தனைக்கும் இந்த ஆலையில் வேலை செய்வது 120 தொழிலாளிகள்தான்! எண்ணிக்கையில் குறைவான இத்தொழிலாளிகள் மூலம் கோடி கோடியாய் லாபம் ஈட்டும் முதலாளி யார் தெரியுமா? வடபாதி மங்கலம் பெரு நிலப்பிரபு தியாகராசனின் மகன் சோமசுந்தரம்தான். இந்த ஆலை தவிர திரு ஆரூரான் சக்கரை ஆலை மற்றும் இரு சர்க்கரை ஆலைகளும் இவருக்கு உள்ளன.

முதலாளியின் விசுவாச நாயாக உள்ள நரசிங்கராவ் என்பவன்தான் இந்த ஆலையின்மானேஜர். தன்னை ஒரு நிலப்பிரபுவாக கருதிக்கொண்டுதொழிலாளிகளை பண்ணையடிமைகளைப் போல நடத்துவதென்பது இவன் பிறவிக்குணம். இல்லையேல் அலுவலகத்துக்கு அழைத்து விசாரணை என்ற பெயரில் மிரட்டுவான்.

இதேஆலையில் நான்காண்டுகளுக்கு முன் பாய்லர் வெடித்து மூன்று தொழிலாளிகள் மாண்டு போனார்கள். இறந்து போன சக தொழிலாளியை மருத்துவமனையில் பார்க்கச் சென்ற சங்கச் செயலாளர் ஜெயபால் உணர்ச்சி வேகத்தில் சடலத்தைச் சுற்றியிருந்த கும்பலை விலக்கிவிட்டு மரணத்தைத் தழுவிய தொழிலாளிகளின் உடலைப்பார்த்துகண்ணீர் வடித்திருக்கிறார். கூட்டத்தை விலக்கும்போது சங்கச்செயலாளர் ஜெயபாலின் கை மானேஜர் நரசிங்கராவ்மீது பட்டுவிட்டதாம். இதைப் பயன்படுத்திக் கொண்டு ஆவணமிக்க நரசிங்க ராவ் தன்னைக் கொலை செய்ய வந்ததாக ஜெயபால்மீது வழக்கு தொடுத்தான். ஆனால் வழக்கு பொய்யென்று நிரூபிக்கப்பட்டும் கூட, நிர்வாக விசாரணை என்ற நாடகமாடி செயலாளர் ஜெயபாலை சமீபத்தில் வேலை நீக்கம் செய்தான் நரசிங்கராவ். காரணம், இவர் நிர்வாகத்தை எதிர்த்துப் போராடும் தொழிற்சங்கத்தை தலைமையேற்று நடத்துவதால் தான். ஆனால் வர்க்க உணர்வுள்ள ஜெயபால் வேலைஇழந்தும் கூட இன்றுவரை சங்க செயலாளராக பொறுப்பேற்று எம்ளாயீஸ் யூனியனை வழிநடத்தி வருகிறார்.

இந்தக் கேடுகெட்ட ஆலை நிர்வாகம் பினாமி முறையில் சொத்துக்களைக் குவித்திருப்பதைப் போலவே, பினாமி தொழிற்சங்கம் ஒன்றையும்ஊழியர் பொதுநல சங்கம் என்ற பெயரில் வைத்திருக்கிறது. நிர்வாகத்தின் தலையாட்டி பொம்மைகளான ராஜு என்பவரைத் தலைவராகவும், வைரக்கண்ணு என்பவரை செயலாளராகவும் வைத்துக் கொண்டு சில தொழிலாளிகளிடம் கையெழுத்து வாங்கி கொண்டது. ஒப்பந்தம் வெற்றிகரமாக முடிந்ததென விழா கொண்டாடி விருந்தும் கலை நிகழ்ச்சியும் நடத்தியது. ஆத்திரமுற்ற எம்ளாயீஸ் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் கறுப்புக் கொடியணிந்து இம்மோசடி ஒப்பந்தத்தை எதிர்த்தனர். அதைத் தொடர்ந்து, பழி வாங்கப்பட்ட சங்கச் செயலர் ஜெயபாலை மீண்டும் வேலையில் அமர்த்தவேண்டும். எல்லா தொழிலாளர்களும் ஏற்கும் வகையில் புதிய ஒப்பந்தம் போடப்படவேண்டும்; பெரும்பான்மை தொழிலாளர்களைக் கொண்ட தங்கள் சங்கம் அங்கீகரிக்கப்படவேண்டும்; சர்வீஸ் அடிப்படையில் கிரேடு கொடுக்கப்படவேண்டும் முதலான கோரிக்கைளை முன்வைத்து ஜூன் 16 முதல் உண்ணா விரதப் போராடத்தைப் மேற்கொண்டனர். அரண்டுபோன நிர்வாகம், தலையாட்டி சங்கமான பொது நலச் சங்கத்தின் பெயரில், தொழிலாளர்களுக்கு அள்ளி அள்ளி ஊதியம் வழங்குவதாகவும், ஒப்பந்தம் ஐந்தாண்டுக்கென இருந்தாலும் மூன்றாண்டுகளுக்குள் ஒப்பந்தத்தை முடித்து மறு ஒப்பந்தம் போடப்போவதாகவும் திருச்சி நகர் முழுவதும் போஸ்டர்களை அச்சிட்டு ஒட்டியது.

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரிக்கும் அதே சமயம் உண்ணாவிரதம் போன்ற நீர்த்துப்போன போராட்ட முறைகளை விமர்சித்து, நிர்வாகத்தை நிர்பந்திக்கும் வகையிலான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள் வழிகாட்டினர் புரட்சிகர அரசியலில் பயிற்றுவிக்கப்பட்டு, பரந்துபட்ட மக்களைஅணிதிரட்டிக் கொண்டு தொழிற்சங்கம் புரட்சிகரப் போராட்டங்களில் இறங்கும்போது அந்த வீரியமிக்க அமிலத்தில் ஆணவம் பிடித்த நிர்வாகம் பொசுங்கப் போவது நிச்சயம்! ஓங்குக தொழிலாளர் போராட்டம்!

● செல்லப்பன், திருச்சி



படிப்பகம்

www.padippakam.com




# “ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்”

(சென்ற இதழின் தொடர்ச்சி)

அரசியல் தரகுவேலை செய்வதிலேகைதேர்ந்தவர்கள், போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள். மற்ற பிற முதலாளித்துவக் கட்சித் தலைவர்களையும் எடுத்து விழுங்கிவிடக் கூடிய அளவு திறமையானவர்கள். தொழிற்சங்கத் தரகுவேலைகளின் அனுபவம் இதற்கு முக்கியக் காரணமாகும். டாங்கே, அஜாய் கோஷ், ஜோஷி, நம்பூதிரிபாடு, மோகன் குமாரமங்கலம், கல்யாண சுந்தரம், பாலதண்டாயுதம் என்று நீண்டு கொண்டே போகும் இந்த வரிசையில் முன்னிலை வகிப்பவர் திருவாளர் பி. ராமமூர்த்திதான் என்றுசொல்லலாம்.

இதிலே ராமமூர்த்தியின்தனிச் சிறப்பு என்னவென்றால் மற்ற தலைவர்கள் தமது அரசியல் தரகு வேலைகளை இரகசியமாக வைத்துக் கொள்ள முயலுவார்கள். ஆனால் ராமமூர்த்தி அந்த ரகம் அல்ல. தமது அரசியல் தரகு வேலைகளை மிகவும் பெருமைக்குரிய சாதனைகளாக, பகிரங்கமாகவே பீற்றிக் கொள்பவர். கட்சி வேறுபாடின்றி எல்லா ஓட்டுக் கட்சித் தலைவர்களிடமும்தனக்கு நெருங்கிய உறவு இருந்தது; இன்னும் சொல்லப் போனால் அவர்களுடைய கட்சிக்காரர்களை விட ராமமூர்த்தியைத்தான் மிகவும் நம்பினார்கள் என்று அவர் எழுதுகிறார். அதேபோல வர்க்க வேறுபாடின்றி முதலாளிகளுடன் தான் சிநேகம் கொண்டிருந்ததாகவும்கூட ராமமூர்த்தி எழுதுகிறார். இதைச் சொல்வதற்காக ராமமூர்த்தி தமது நூலில் குறிப்பிடும் சம்பவங்கள், அவர் ஒரு கை தேர்ந்த அரசியல் தரகர் என்பதற்கான ஆதாரங்களாக விளங்குகின்றன.

முதலாவதாக, காங்கிரசுக் கட்சிக்கு ஆள்பிடிக்கவும் ஓட்டுப் பொறுக்கவும் இறங்கிய வீரதீர சாதனையை விவரிக்கிறார். 1936ல் இராஜாஜி தலைமையில் காங்கிரசு தேர்தலில் போட்டியிட்டது. அதிலே தனது பங்கு பற்றிப் பின்வருமாறு ராமமூர்த்தி எழுதுகிறார்.

‘‘கிழக்கு ராமனாதபுரத்தில் ராமனாதபுரமும், முதுகுளத்தூர், பரமக்குடி ஆகிய தாலூகாக்களைக் கொண்ட தொகுதியில் முக்குலத்தோர் — குறிப்பாக— தேவர்கள் மிகப் பெரும்பான்மையானவர்கள்—இருந்தார்கள். ராமனாதபுரம் ராஜாவும் அதே தேவர் வகுப்பைச் சேர்ந்தவர். அந்த மக்களுக்குப் பரம்பரையாக ராஜாவின் மீது மிகுந்த விசுவாசமிருந்தது. அந்தத் தொகுதியில் யாரை நிறுத்துவதுஎன்று தெரியவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, காமராஜையும் என்னையும் அந்தத் தொகுதிக்குப்போய் யாரையாவது காங்கிரஸ் சார்பில் வேட்பாளராக நிறுத்துவதற்கு ஆளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அனுப்பியது. முதலில் யாரும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. கடைசியில், உ. முத்துராமலிங்க தேவர் என்ற வாலிபர் தேவர் சமூகத்தில் பிரபலமாயிருந்த உக்கிர பாண்டித்தேவரின் மகன் என்றும், அவர் தந்தையின் கொடுமைகளை எதிர்த்ததால் அவருக்கு நல்ல பெயர் உள்ளது என்றும் கேள்விப் பட்டோம். பசும்பொன் கிராமத்துக்குச் சென்று அவரைச் சந்தித்தோம். ஆரம்பத்தில் அவர் ராஜாவை எதிர்த்து நிற்க மறுத்தார். பிறகு நீண்டநேரம் விவாதித்து, அவரைச் சம்மதிக்க வைத்தோம். (ராமமூர்த்தி நூல், பக். 117—118.

அதே போல ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் போய் பெரியாரைக் காங்கிரசுக் கட்சியில் சேர்க்க முயன்று தோற்றுப் போனதை முன்பு பார்த்தோம். கம்யூனிசஇயக்கத்தை வளர்க்கவும், புரட்சிக்குத் தயாரிக்கவும் காங்கிரசுக்குள் ஒளிந்து கொள்வதாகச் சொன்னார்கள் போலிக் கம்யூனிஸ்டுகள். ஆனால் உண்மையில் அங்கிருந்துக் கொண்டு தேசதுரோகக் கட்சியான காங்கிரசை வளர்க்கவும் ஓட்டுப் பொறுக்கவுமே வேலை செய்தார்கள். தானே நாடாளுமன்ற சாக்கடையில் விழுந்து புரளுவதோடு சமூக, சீர்திருத்தஇயக்கமாயிருந்த திராவிடர் கழகத்தையும் அந்த சாக்கடைக்குள் இழுத்துப்போட ராமமூர்த்தி முயன்றார்.

காஷ்மீர் பிரச்சினையில் ஷேக் அப்துல்லாவுடன் பேரம் பேசுவதில் நேருவின் தரகராக செயல்பட்டார், ராமமூர்த்தி.

காங்கிரசு மற்றும் பிற முதலாளித்துவக் கட்சிகளில் எவ்வளவோ தலைவர்கள் இருக்கும் போது, எவ்வளவோ அரசு அதிகாரிகள் இருக்கும்போது காஷ்மீர் பிரச்சினை குறித்து ஷேக் அப்துல்லாவுடன் பேசுவதற்கு நம்பகமான நபராக ராமமூர்த்தியை நேரு தெரிவு செய்து அனுப்பியுள்ளார். காஷ்மீர் பிரச்சினைஎன்பது என்ன? 1947 அதிகாரமாற்றத்தின்போது இந்தியா, பாகிஸ்தான் என்று நாட்டை இரண்டாக பிளந்துவிட்டு சமஸ்தானங்கள் தமது விருப்பம்போல முடிவு செய்யலாம் என்று காலனியவாதிகள் கூறிவிட்டனர். காஷ்மீர் சமஸ்தானத்தில் பெரும்பான்மையினர் முஸ்லீம்கள்; அரசனோ இந்து. காஷ்மீரைஇந்தியாவுடன்இணைப்பது என்று இந்திய அரசுடன் பேரம்பேசி இந்து அரசன் முடிவு செய்துவிட்டார். பாகிஸ்தானும் இந்தியாவும் போரின் மூலம் காஷ்மீரைப் பிரித்துக் கொண்டன. காஷ்மீர் முழுவதும் தனக்கே சொந்தமென்று இந்தியாவும், பாகிஸ்தானும் இன்னமும் உரிமை பாராட்டுகின்றன.

அப்போது, காஷ்மீரில் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் தலைதூக்கியது. அதன் தலைமையைக் கைப்பற்றிய ஷேக் அப்துல்லா ஒருபுறம் இந்திய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டு தேர்தலில் நின்று முதலமைச்சராயிருந்தார். மறுபுறம் சுதந்திரக் காஷ்மீர் கோரிக்கையை முன் வைத்து காஷ்மீர் மக்கள் தமது அரசியல் நிலையை— சுயநிர்ணய உரிமையை தீர்மானிப்பதற்கு பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக்கோரிப் போராடினார். ஒரு கம்யூனிஸ்டு என்கிற முறையில் காஷ்மீர் இனமக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதற்குப்பதில், அந்தக் கோரிக்கையைக் கைவிடும்படி செய்வதற்காக தரகுவேலை செய்திருக்கிறார் ராமமூர்த்தி. இதற்காக கடந்த 40 ஆண்டுகளாக நடக்கும் அரசியல் விபச்சாரத்தின் ஆரம்பகாலத் தரகராக ராமமூர்த்தி இருந்திருக்கிறார்.

ராமமூர்த்தி சட்டமன்ற எதிர்க்



படிப்பகம்

www.padippakam.com

கட்சித் தலைவராயிருந்த போது தமிழக முதல்வர் ராஜாஜிக்கும் கேரள முதல்வர் பட்டம்தாணு பிள்ளைக்கும் இடையே வெற்றிகரமான முறையில் செய்துமுடித்த ஒருபேரத்தைப்பற்றி எழுதுகிறார். கேரளத்திலுள்ளபெரியார் அணையைக் கட்டி தமிழகத்திற்கு நீர் பாசனத்துக்குப் பயன்படுத்துவது என்றும் அணைக்கட்டுப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு ஒரு அணா (6 காசு) வீதம் திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கு தருவது என்று 1398லிருந்து 999 ஆண்டுகளுக்கு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது பாசனத்திற்காக உரிமை பெற்ற நீரிலிருந்து மின்சாரம் தயாரிப்பதுஎன்று 1946ல் சென்னை அரசு ஒரு திட்டம் வகுத்தது. திருவிதாங்கூர்—கொச்சி அரசுகள் அதை எதிர்த்தன.

''சென்னையில் இராஜாஜி முதலமைச்சராக இருந்த காலத்தில், கேரளத்தில், பட்டம் தாணு பிள்ளை முதலமைச்சராக இருந்தார். நான் அப்போது கேரளத்தில் கட்சிப்பணி சம்பந்தமாகச் சென்றிருந்தேன். அந்த சந்தர்ப்பத்தில் பட்டம்தாணுபிள்ளையைச் சந்தித்தேன்''

அப்போது பட்டம்தாணு பிள்ளையிடம் இந்தத் திட்டத்தில் உங்களுக்கு என்ன ஆட்சேபனை? என்ன கஷ்டம்? என்று ராமமூர்த்தி கேட்டார். அவருக்குக் கோபம் வந்தது; பொரிந்து தள்ளிவிட்டார். பெரியார் ஒப்பந்தத்தால் தமிழ்நாட்டிற்குத்தான் லாபம்! ஏக்கருக்கு ஒரு அணா மட்டுமே பெறும் கேரளத்திலோ அரிசிப்பஞ்சம்; இப்போது லாபமேதும் இல்லாமல் மின்சார உற்பத்திக்கும் சம்மதிக்க வேண்டுமா? என்று ஆத்திரத்தோடு கேட்டார் பட்டம்தாணுபிள்ளை.

''புரிந்து கொண்டேன், அவருடைய உள்ளக் கிடக்கையை. தமிழ்நாட்டுக்கு வந்ததும் இராஜாஜியை சந்தித்து இதை எடுத்துக் கூறினேன். ஒரு யூனிட் மின்சார உற்பத்திக்கு 2 பைசா வீதம் கேரள சர்க்காருக்குக் கொடுத்தால் இந்த ஆட்சேபணையை கைவிடும்படி செய்ய முடியும் என்று கூறினேன். இதில் நியாயம் இருக்கிறது என்றும் எடுத்துக் கூறினேன். அவரும் விஷயத்தை புரிந்து கொண்டார். அப்படியே பட்டம்தாணு பிள்ளையைச் சம்மதிக்க வைக்கும்படி நானே அவரிடம் பேச வேண்டுமென்று கோரினார். ராஜாஜிக்கே உரித்தான வகையில் என்னை எச்சரித்தார். 'பேரத்தை யூனிட்டுக்கு ஒரு பைசாவில் துவக்குங்கள், உடனே 2பைசா என்று சொல்ல வேண்டாம்' என்று கூறினார்.

''இதற்காகவே பின்பு மூன்று முறை திருவனந்தபுரம் சென்று பட்டம்தாணுபிள்ளை அவர்களைச் சந்தித்தேன். யூனிட்டுக்கு இரண்டு பைசாவுக்கு சம்மதிக்கும்படி செய்தேன்.

அதன் பிறகு ராஜாஜியிடம் இதைக் கூறி, இனி அரசு அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தையை நடத்தி உடனே ஒப்பந்தத்தைச் செய்து விடும்படி கூறிவிட்டேன். அதிகாரிகள் மட்டத்தில் இரண்டு அரசுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து ஒரு மாதத்திற்குள் இந்த பிரச்சனை சுலபமாக, சுமுகமாகத் தீர்ந்தது (மேற்படி நூல், பக். 391—392)

இதே போல 1957இல் கேரளத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்த பிறகு பரம்பிக்குளம்—ஆழியார் ஒப்பந்தத்திற்கு பேரம் நடத்தியது குறித்தும் விரிவாக எழுதுகிறார் ராமமூர்த்தி. இந்தத் திட்டத்திற்காக நம்பூதிரிபாடு மந்திரிசபையுடன் ராமமூர்த்தி பேசி சம்மதிக்க வைத்தார். இதைச் சாக்காக வைத்து கேரள மக்களிடையே ஆத்திரத்தைத் தூண்டி அரசைக் கவிழ்க்க முயலக் கூடாது என்று அப்போது இருந்த காமராசர் மந்திரிசபை மூலம் டெல்லியிடம் உத்திரவாதம் கோரியபோது டெல்லி மறுத்துவிட்டது. ஆனாலும் விடாப்பிடியாக ராமமூர்த்தி முயன்றதால்

டும். அவை வரலாற்றில் இடம் பெறாமல் புதைந்து கிடக்கட்டும். அதுவே என் மனப்பூர்வமான அபிலாஷை'' என்று உணர்ச்சி ததும்ப எழுதுகிறார்.

ஆனால் வரலாற்றில் இடம் பெற வேண்டிய பல துரோகங்களையல்லவா ராமமூர்த்தி செய்திருக்கிறார். போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மாநிலங்களின் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடுவது என்கிற பெயரிலும், தொழிலாளர் பிரச்சினைகளில் தலையிடுவது என்கிற பெயரிலும் முதலாளிகளுடன் பல பேரங்களை அரசியல் தரகு வேலைகளைச் செய்துள்ளார் ராமமூர்த்தி. அதிலே அவரே இரண்டு சம்பவங்களை இந்நூலில் எழுதுகிறார்.

கேரளத்தில் தேவையான கச்சாப்பொருட்கள் இருந்தும் மூலதனப் பஞ்சம் நிலவுவதால் தமிழ் நாட்டு 'முதலாளி'களின் உதவியை நாடுவது என்று 1957ல் முதல்வராயிருந்த நம்பூதிரிபாடு முடிவு செய்து சென்னை வந்தார். ''தமிழ்நாட்டு முதலாளிகளைச் சந்தித்து பேசுவதற்கான, வாஹினி ஸ்டுடியோ அதிபர் திரு. நாகிரெட்டியாரின் உதவியுடன் நான் அவருடைய 'விஜயா கார்டன்ஸ்'லேயே ஒரு கூட்டத்திற்கும், தேநீர் விருந்திற்கும் ஏற்பாடு

> **''தனது சர்க்காரின் மானத்தைக் காக்கும்படி'' இந்திராவே வேண்டும் அளவுக்கு முக்கியமானவர், ராமமூர்த்தி, நேரு, இந்திரா குடும்பத்தினர் தமது கட்சித் தலைவர்களைவிட மிகவும் நம்பகமான தூதராக ராமமூர்த்தியையே மதித்தனர். இவற்றை ராமமூர்த்தி தனது கட்சி மாநாட்டிலும், பத்திரிக்கையாளர்களிடமும்பகிரங்கமாகவே பீற்றிக் கொண்டுள்ளார்.**

புதிய திட்டம் வகுத்து ஒப்பந்தம் ஏற்பட்டது என்கிறார்.

இவ்வாறு பல உதாரணங்களை சொல்லி ''இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளில் 1952க்குப் பிறகு பல ராஜ்யங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தலையிட்டுள்ளேன். மத்திய சர்க்காருக்கும், காஷ்மீர் சர்க்காருக்கும் இடையே ஏற்பட்ட தகராறை தீர்ப்பதற்கு இரண்டு முறை தலையிட்டு—என் தலையீட்டின் விளைவாக—அந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

இவைகளைப் பற்றியெல்லாம் கூறுவதற்கு இந்தப் புத்தகத்தில் இடமில்லை. இவைகளைப் பற்றி நான் பேசி, விளம்பரத்தையோ, புகழையோ தேடவுமில்லை. அந்தத் தலையீடுகளினால் நாட்டுக்கு அவசியமான சில பிரச்சனைகள் தீர்ந்ததைப் பற்றி எனக்கு ஏற்பட்ட மனத் திருப்தியோடு, மகிழ்ச்சியோடு அவை முடியட்

செய்திருந்தேன். தமிழ்நாட்டு முதலாளிகள் பெரும்பாலோர் அழைப்பினை பெற்றுக் கொண்டு வந்திருந்தனர். அக்கூட்டத்தில் கேரளத்தில் அவர்கள் முதலீடு செய்வதற்கு இயற்கையாக உள்ள வசதிகளையும், அரசு தரப்பிலிருந்து செய்து கொடுக்கும் வசதிகளையும் விளக்கிக் கூறினார். கேரளத்தில் தொழில்களை நிறுவ முன் வருமாறு கோரினார். யாரும் முன்வரவில்லை.''
(மேற்படி நூல், பக். 388)

குறிப்பாக ரப்பர்—டயர் தொழிற்சாலை நிறுவுவதற்கான கச்சாப் பொருள், சந்தை வசதிகள் இருப்பதாகவும் பாதி மூலதன ஏற்பாடு செய்து தருவதாகவும், 25 ஆண்டுகளுக்கு நிர்வாகப் பொறுப்பை விட்டுத் தருவதாகவும் நம்பூதிரிபாடு உத்திரவாதம் அளித்தார். 'எனக்கு சுதந்திரப் போராட்டம் துவங்கிய 1930 லிருந்தே பழக்கப்பட்ட டி.வி.எஸ் குடும்பத்தையும் அணுகிப் பார்த்



படிப்பகம்

www.padippakam.com

தேன். எல்லோரும் மறுத்துவிட்டனர்'' (மேற்படி நூல், பக் 389) பிறகு ஒரு வடநாட்டு முதலாளி ஒப்புக் கொள்ளவே ''பிரிமியர் டயர்ஸ்'' ஆலை நிறுவப்பட்டது என்கிறார் ராமமூர்த்தி.

மாநிலங்களின் தொழில் வளர்ச்சி—வேலை வாய்ப்பு என்கிற பெயரில் போலிக் கம்யூனிஸ்டுகள் நடத்தும் ஆட்சி பிற முதலாளித்துவ ஆட்சிகளைப் போன்றதுதான் என்பது அப்போதிருந்தே பின் பற்றிய கொள்கை. இதை மட்டுமல்ல தென்னிந்தியாவிலேயே பெரிய சினிமா முதலாளி நாகிரெட்டி முதற் கொண்டு தென்னிந்தியாவிலேயே பெரிய தரகு அதிகார முதலாளி டி.வி.எஸ் குடும்பம் வரை ராமமூர்த்தி எவ்வளவு நெருக்கமானவர் என்பதையும் இந்தச் சம்பவத்தின் மூலம் பெருமையாகக் காட்டிக் கொள்கிறார் ராமமூர்த்தி.

இதேபோல தமது தொழிற் சங்கத் தரகுவேலை பற்றியும் ஒரு சம்பவத்தின் மூலம் குறிப்பிடுகிறார். 1967இல் பீகாரிலுள்ள ஜாம்ஷெட்பூரில் 75 ஆயிரம் என்ஜினீரியங் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரிப் போராடினர்; 144 தடையுத்தரவு போட்டு அவர்கலை ஒடுக்கியது பீகார் அரசு. அங்கு போய் பீகாரிலுள்ள காங்கிரசு ஆட்சிக்கும் மேற்கு வங்கத்திலுள்ள இடதுசாரி முன்னணி ஆட்சிக்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்துப் பேசினாராம் ராமமூர்த்தி. அதில் தனது பங்கு பற்றிப் பின்வருமாறு அவர் எழுதுகிறார்.

''போராட்டம் 90 நாட்களுக்குமேல் நடத்த வேண்டி வந்தது. டில்லிக்கு விரைந்தோடி, தொழிலாளிகளின் கட்டுப்பாட்டையும், உறுதியையும் பிரதமரிடமும், தொழிலமைச்சர்கள் மற்றுமுள்ள அமைச்சர்களுக்கும் உணர்த்தினேன். இந்த நியாயமான போராட்டத்தை போலீஸ் தடியடி, குண்டாந்தடி, துப்பாக்கிப் பிரயோகம் ஆகிய வழக்கமான வன்முறைகளினால் அடக்க முடியாது; தொழிலாளிகளுக்கு மேலும் ஆத்திரமும், ஆவேசமும் உண்டாவதைத்தவிர வேறு எந்தவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை என்பதனை இந்திரா காந்தியிடம் எடுத்துக் கூறினேன்.

''மத்தியசர்க்காரும், இறுதியில் நிலைமை மோசமாவதோடு, தன்னுடைய மாநில சர்க்காரின் மானம் தொழிலாளிகளின் கட்டுப்பாடான போர்க் கோலத்தின் முன்னே கப்பலேறுவதைக் கண்டனர். அதனால் முதலாளிகளை — டாட்டா கம்பெனி, ஸாஹு ஜெயின் கம்பெனி போன்ற பகாசூர முதலாளிகளைடெல்லிக்கு வருமாறு தாக்கீது அனுப்பினார்.

அவர்கள் டெல்லிக்கு வந்த பிறகு என்னைச் சந்தித்து இந்தச் சம்பள உயர்வுப் போராட்டத்தில் நியாயமானதோர்உடன்பாட்டிற்கு வந்து தன் சர்க்காரின் மானத் காத்திடும்படி வேண்டினார். அந்த முதலாளிகள் பிறகு என்



## ஒரு கம்யூனிச துரோகியின் மரணம்

இறுதி மூச்சு உள்ளவரை கம்யூனிச துரோகியாகவே வாழ்வேன் என்கிற இலட்சிய வெறியோடு வாழ்ந்தவர். திருவாளர். எம். கலியாணசுந்தரம். சென்ற மாதம் மாரடைப்பால் மரணமடைந்தார். தொழிலாளர் இயக்கத்துக்குள் ஒளிந்து கொண்டிருந்த பாசிசத்தின் உற்றநண்பர் மறைந்துபோய்விட்டார். நாடாளுமன்ற ஜனநாயகம் இன்னொரு தலையாய அரசியல் தரகரை இழந்துவிட்டது.

மற்றபிற போலிக்கம்யூனிஸ்டுகளைப் போலவே காந்திய காங்கிரசு பாரம்பரியத்தில் ஊறியவர் கல்யாண சுந்தரம். தொழிலாளர் இயக்கத்தை பொருளாதார—சட்டவாத சகதிக்குள் மூழ்கடிப்பதில் முக்கிய பங்காற்றியவர். அதேபோல கம்யூனிச இயக்கத்தை பாராளுமன்றப் பற்றித் தொழுவத்துக்குள் முடக்கி வைப்பதற்கு அரும்பாடு பட்டவர்.

ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் அரசை நவீன திருத்தல்வாதிகள் கைப்பற்றி சமூக ஏகாதிபத்தியமாக மாற்றிய பிறகு தமிழகத்தில் அதன் நம்பகமான எடுபிடியாக இருந்து பணியாற்றியவர். எஜமானனை விட எஜமானனுக்கே விசுவாசமானவர் கல்யாணசுந்தரம். எனவேதான் பாசிச இந்திரா—ராஜீவ் கும்பலை ருஷ்யத் திருத்தல்வாதிகள் தொடர்ந்து உயர்த்திப் பிடிப்பதை தாமும் ஏற்று அவர்கள் காலால் இட்டதைத் தன் தலையால் சுமந்து செய்துவந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் 'பிளந்து எம்ஜிஆரை ஒரு அரசியல் தலைவராக உருவாக்கி பாசிச இந்திரா–ராஜீவ் கும்பலின் நம்பகமான பாதந்தாங்கியாக்கியவர் கல்யாணசுந்தரம்.

அவசர நிலைக்குப்பிறகு ''வலது கம்யூனிஸ்டு கட்சி'' இந்திரா எதிர்ப்பு நிலை எடுத்தது. ஆனால் ருஷ்யாவின் கட்டளை—கணிப்பை ஏற்று தொடர்ந்து இந்திரா கும்பலை ஆதரித்த டாங்கே கல்யாணசுந்தரம் கும்பல் சில குழுக்களாக வெளியேறின. மீண்டும் ஒன்றுபட்டு பாசிச ராஜீவின் ஐந்தாம்படையாக, தொழிலாளர் இயக்கத்துக்குள் ஒரு சக்தியை உருவாக்குவதற்கு முயன்று கொண்டிருந்த நிலையில் கல்யாணசுந்தரம் மரணமடைந்து விட்டார். பாசிஸ்டுகளுக்கும் அவர்களுடைய அடிவருடிகளுக்கும் உண்மையில் இது பேரிழப்பாகும். ஆனால்கல்யாண சுந்தரத்தை கம்யூனிச இயக்கம் மறக்காது. அதன் வரலாற்றில் துரோகிகளின் வரிசையில் நிச்சயம் அவர் இடம் பெறுவார்!



படிப்பகம்

www.padippakam.com

னைச் சந்தித்து, பேச்சுவார்த்தைகள் நடத்தி ஊதிய உயர்வு கொடுக்கச் சம்மதித்தனர். அதன் அடிப்படையில் பீகார் மாநில தொழிலாளர் நல அமைச்சர் டெல்லிக்கு வரவழைக்கப்பட்டு அவருக்கு முன்னால் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.''

(மேற்படி நூல் பக் 414-415)

90 நாட்கள், 75 ஆயிரம் தொழிலாளர்கள் தீவிரமாகப் போராடியும் ராமமூர்த்தியின் சாதுர்யத்தினால்தான் பிரச்சினை தீர்ந்தது. ''உடன்பாட்டிற்கு வந்து தனது சர்க்காரின் மானத்தைக் காக்கும்படி'' இந்திராவே வேண்டும் அளவுக்கு முக்கியமானவர் ராமமூர்த்தி. நேரு, இந்திரா குடும்பத்தினர் தமது கட்சி தலைவர்களைவிட மிகவும் நம்பக தூதராக ராமமூர்த்தியையே மதித்தனர். இவை ராமமூர்த்தி தனது கட்சி மாநாட்டிலும், பத்திரிக்கையாளர்களிடமும் பகிரங்கமாகவே பீற்றிக் கொள்பவை.

1973ல் குஜராத் ஊழல் அரசையும் சட்ட மன்றத்தையும் கலைக்கும்படி மாணவர் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. அங்குள்ள நிலைமையைக் கணித்துவரும்படி தனது கட்சித் தலைவர் மனுபாய் ஷாவை அனுப்பினார் இந்திரா. பிறகு அவரையும் நம்பாது, ராமமூர்த்தியை அனுப்பி நிலைமையை அறிந்து மந்திரி சபையையும் சட்டமன்றத்தையும் கலைத்தார். எனவே தனது கட்சிக்காரர்களைவிட ராமமூர்த்தியைத்தான் இந்திரா அதிகமாக நம்பினார். இது தனது கட்சி மாநில மாநாட்டில் ராமமூர்த்தி பெருமையாகச் சொன்னசெய்தி.

அதேபோல 1969 இல் அண்ணாத்துரை புற்று நோய்க்கு அமெரிக்கா போய் சிகிச்சை பெற்றுத் திரும்பினார். சென்னை அடையாறில் குளுகுளுவசதியுடன் தங்கி ஓய்வெடுக்க ஒரு மாளிகை ஏற்பாடு செய்தார்கள். அண்ணாதுரையை சந்தித்த ராமமூர்த்தி ''இங்கே தங்கினால் எப்படியும் கட்சிக்காரர்கள் தொந்தரவு செய்வார்கள். இமாசலப் பிரதேசத்தில் மணாலி என்ற இடத்தில்தான் பண்டிதநேரு அடிக்கடி ஓய்வெடுப்பார். மணாலிக்குப்போகும் வழியில் உள்ள ஸுந்தர் நகரில் ஒரு நெருங்கிய நண்பர் இருக்கிறார். அங்கு தங்கி ஓய்வெடுக்கலாம்'' என்று யோசனை சொல்லி ஏற்பாடு செய்தார்.

ஆனால் ஓய்வெடுத்துக் கொள்ளும் யோசனையை தான் கைவிட்டு விட்டதாக கூறிய அண்ணாதுரை, ''என்னுடைய கட்சி நான் விரும்பியதற்கு முன்பே ஆட்சிக்கு வந்துவிட்டது. நான் இன்னும் சில காலத்திற்குப் பிறகுதான் ஆட்சிக்கு வரும் என்று எதிர்பார்த்தேன். என்னுடைய கட்சியில் லஞ்ச ஊழல் பரவி விட்டது. நோய்வாய்ப்பட்டிருக்கும் இதே நிலையில் இதைச் சீர்படுத்தும் நிலையில் நான் இல்லை. எனவே, பணியாற்றிக் கொண்டே உயிர் நீத்து விடுவது என்று தீர்மானித்து விட்டேன்'' என்று இறுதியில் ஆங்கிலத்தில் கூறியதை வேதனையோடு கேட்டேன். அவர் உள்ளத்திலிருக்கும் வேதனையை, மாற்றுக் கட்சிக்காரனாகிய என்னிடத்தில், 1934 முதல் ஆழமான கருத்து மாறுபாடுகள் இருந்த போதிலும், தோழமை உணர்ச்சியுடன் ஒரு சகோதரனைப்போல் பழகிய என்னிடம் பகிர்ந்து கொண்டதன் மூலம் அவருக்கு ஓரளவு ஆறுதல்கிடைத்திருக்குமோ என்று நினைத்தேன்

(மேற்படி நூல், பக் 429)

ஆக, நேரு—இந்திராவைப் போலவே, அண்ணாத்துரைதமது அருமைத் தம்பிகளைவிட ராமமூர்த்தியிடமே நெருக்கமாக இருந்தார். அண்ணாதுரை தமது அரசின் அரசியல், தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ராமமூர்த்தியின் உதவியையே நாடினார் என்று கூறுகிறார் ராமமூர்த்தி.

அதற்கு உதாரணமாக கோவை பஞ்சாலைத்தொழிலாளர் பிரச்சினையில் ராமமூர்த்தி உதவியது; கீழ் வெண்மணி கொலைகாரர்கள் மீது ராமமூர்த்தி யோசனை கேட்டு நேரடியாக கிரிமினல் வழக்குத் தொடர்ந்தது; மூடிய துணி ஆலைகளை மத்திய அரசே எடுத்து நடத்த வேண்டும் என்பதற்காக நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு கல்யாணசுந்தரத்தையும் ராமமூர்த்தியையும் அழைத்துப் போனது ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். ''அவரிடம் பல தொழிலாளர்கள், விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நான் எடுத்துச் சென்றிருக்கிறேன். அவர் ஓரளவு தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கக் கூடிய வகையில்தான் நடந்துக் கொண்டிருக்கிறார்''

(மேற்படி நூல், பக். 427)

ராமமூர்த்தி தனது சொந்தச் சாதனைகளாக குறிப்பிடும் இந்தச் சம்பவங்கள் எல்லாம் அவர் ஒரு கை தேர்ந்த அரசியல் தொழிற்சங்கத் தரகர் என்பதைத்தான். நாடு எதிர்கொண்டுள்ள அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தொழிலாளர் — விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ராமமூர்த்தி கண்டறிந்துள்ள வழி முதலாளிகளிடமும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளிடமும் மிகவும் நெருக்கமாக இருந்து நம்பிக்கையைப் பெற்று சாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான். இப்படிப்பட்ட அரசியல்—தொழிற்சங்கத் தரகு வேலை தவிர வேறு உருப்படியான புரட்சிகரமான பணி எதையாவது ராமமூர்த்தி தனது வாழ்நாளில் செய்திருக்கிறாரா என்று தேடினால் துளியும் கிடையாது.

''ஆரிய மாயையா? திராவிட மாயையா? விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்'' என்கிற நூலை எழுதியதன் மூலம் திருவாளர் பி. ராமமூர்த்தி சாவதற்கு முன்பு ஒரு 'நல்ல' கடமையாற்றியிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். ராமமூர்த்தி போன்ற போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தொடர்ந்து புரட்சிக்கும், மக்களுக்கும், தேசத்துக்கும் துரோகமிழைத்து வந்திருப்பதற்குப் பல சான்றுகள் கொடுத்திருக்கிறார். சர்வகட்சியினரும் ,எல்லா முதலாளிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கை தேர்ந்த அரசியல் தரகர்தான் ராமமூர்த்தி என்பதை நிருபிக்கும் வகையில் ஏராளமான சாட்சியங்களைக் கொடுத்திருக்கிறார். கம்யூனிசப் போர்வையில் ஒளிந்து கொண்டிருந்தராமமூர்த்தி அடிப்படையில் தான் ஒரு காந்திய காங்கிரசு பார்ப்பனீயவாதி என்பதை உறுதிப்படுத்துகிறார்.

கம்யூனிச இயக்கத்துக்குள் ராமமூர்த்தி போன்றவர்களின் துரோகத்தனத்துக்கு ஒருவரலாறு இருக்கிறது. அதற்கு வாரிசுகளும் இருக்கிறார்கள். குறிப்பாக ராமமூர்த்தியின் இந்த நூல் அவரது காந்திய காங்கிரசு—பார்ப்பனீய வாரிசுகளுக்கு அவர் கையளித்த உயில் - ஒரு கம்யூனிச துரோகியின் மரண சாசனம்! அதை வரித்துக் கொள்பவர்கள் அதன் மீதான எமது விமர்சனங்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள். (முற்றும்)

❀ ஆர். கே.

**ஒரு கம்யூனிஸ்டு என்கிற முறையில் காஷ்மீர் இன மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதற்குப்பதில், அந்தக் கோரிக்கையைக் கைவிடும்படி செய்வதற்காக தரகு வேலை செய்திருக்கிறார் ராமமூர்த்தி. கடந்த 40 ஆண்டுகளாக நடக்கும் அரசியல் விபச்சாரத்தின் ஆரம்ப காலத் தரகராக ராமமூர்த்தி இருந்திருக்கிறார்.**



படிப்பகம்

www.padippakam.com

# இரத்த சாட்சிகள்

ஏறக்குறைய 16 நாட்கள். எல்லா நேரமும் அவர்கள் என்னுடைய கண்களை மூடிக்கட்டியிருந்தனர்... பிறகு என்னுடைய குதிகால்களில், என்னுடைய ஆணுறுப்பின் நுனியில், என்னுடைய விறைகளில் அவர்கள் மின்சாரம் பாய்ச்சினார்கள். கடைசி இரண்டுநாட்கள் தவிர ஒவ்வொரு இரவும் நின்றுகொண்டே தூங்கும்படி செய்தார்கள். ஒருநாள் விட்டு ஒருநாள் என்னைத் தொங்கவிட்டு அடித்தார்கள். என்னுடைய மூக்கிலும் காதுகளிலும் சூடான இரத்தம் கொட்டவேண்டும் என்று அடிப்பதற்கும் ஒரு அளவுமானி வைத்திருந்தார்கள். என்னுடைய மூக்கிலும் காதுகளிலும் சூடான இரத்தம் கொட்டுவதை நான் உணரும்போது அவர்கள் அடிப்பதை நிறுத்திக் கொண்டு கீழே இறக்கிப் போடுவதைப் பார்த்தேன்.

கிட்டத்தட்ட நாலாம் நாள். என்னிடம் ஒரு எலியைக் காட்டினார்கள். நான் ஏதோ முகஞ் சுழித்திருப்பேன் போல இருக்கிறது. எனவே பிறகு என்னுடைய வாய்க்குள் அந்த எலியைத்திணித்தார்கள். எல்லா வழிகளையும் அடைத்து விட்டு என்னுடைய சட்டைக்குள் எலியைத் திணித்தார்கள். காலுறைகளினால முனைகளைக் கட்டியபிறகு என்னுடைய காற்சட்டைக்குள் எலியைத் திணித்தார்கள்... சித்திரவதைகள் முடிந்ததும் தேசிய மையச் செய்தியகத்திலிருந்து இராணுவ விசாரணையாளரிடம் நேரடியாக இழுத்துப் போகப் பட்டோம். விசாரணையாளருடைய அலுவலகக் கதவின் அருகே முதன்முறையாக என்னுடைய கண்கட்டை கவிழ்த்து விட்டார்கள்.

(நடிகர் செர்கியோ புஷ்மான் அளித்த வாக்குமூலம். நியூயார்க், அமெரிக்கக் கண்காணிப்புக் குழு சமர்ப்பித்த அறிக்கை)

என்னுடைய பெயர் மோனிகா. எனது வயது 18. 1984 ஜூலை 26 புடாஃயூலில் சமூக வேலை நிறுத்த நாள். அன்று சிலி நாட்டுக் கொடியை ஏற்றுவதற்காக ஒரு கம்பத்தின்மீது ஏறினேன். திடீரென்று துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் அதிர்ந்தன. துப்பாக்கிப் படையினர் வந்தனர். புடாஃயூலில் உள்ள போலீஸ் நிலையம் எண் 26க்கு என்னை நான்கு பேர் முரட்டுத்தனமாகத் தூக்கிப் போனார்கள். அங்கே எனது ஆடைகளைக் களைந்தார்கள். கண்களைக் கட்டினார்கள்;எனது மார்பகங்களிலும், பெண்ணுறுப்பிலும் மூட்டுகளிலும் மின்சாரத்தை பாய்ச்சினார்கள்.

பிறகு அவர்கள் எல்லோரும் போய் விட்டார்கள். இரண்டுபேர் மட்டுமே அந்த அறையில் இருந்தனர். நான் முழு நிர்வாணமாயிருந்தேன். எனக்கு மாதவிலக்கு உதிரம் கசிந்து கொண்டிருந்ததால் என்னைக் கற்பழிக்க வேண்டாமென்று அவர்களில் ஒருவன் மற்றொருவனிடம் கூறினான். அவனோ அதைப் பற்றி அக்கறைபடவில்லை. அவன் தனது கைகளால் என்னைத் தூக்கி ஒரு மூலையில் வீசினான். அவன் என்னை என்ன செய்யப் போகிறான் என்று எனக்குத் தெரியும். எனவே எனக்கு நானேசொல்லிக் கொண்டேன். ''நீ ஆசுவாசப் படுத்திக் கொள்ள வேண்டும். பெருமூச்சுவிட்டு சுவாசிக்கவேண்டும்.'' இந்தப்பன்றிபயல் என்னை தாக்கிக் காயப்படுத்த முடியவில்லை. என்னைக் கற்பழித்த பிறகுவலிப்பு வந்தவனைப் போல கூச்சல் போட்டான். நான் ஒரு கொடிய நோயாளி. இழிகேடான நாசகாரி என்று திட்டினான். என் கண்கள் மூடிக் கட்டப்பட்டிருந்ததால் அவனை எட்டி உதைப்பதற்கு மேலே என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. மற்றவர்கள் வந்து அவனை இழுத்துச் செல்லும் வரை என்னுடைய கழுத்தைப் பிடித்து இறுக்கமாக நசுக்கினான். ஆனால் அவர்களில் மற்றொருவன் அந்த அறையிலேயே



சிலி தென் அமெரிக்கக் கண்டத்து நாடு. நெடிதுயர்ந்த ஒரு அசோக மரத்தைப் போல தென் அமெரிக்கக் கண்டத்தின் தென் கோடியிலிருந்து வடகோடிவரை நீண்டு கிடக்கிறது. தென் அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் நெடுக்காக ஓடும் மிக உயர்ந்த மலைத் தொடர் ஆண்டிஸ். அதன் மேற்கு சரிவில் பசிபிக் மாக்கடலைப் பார்த்துக் கொண்டு ஒருபுறம் சாய்ந்து படுத்திருக்கும் மனிதனைப் போன்றது சிலிநாடு. ஆயிரக்கணக்கான சிறியதும்பெரியதுமான தீவுகள் அதன் பசிபிக் கடற்கரைக்கு அப்பால் இருந்து பண்பாடு மிக்க சிலிக்கு எழிலூட்டுகின்றன. உயரிய பண்பாட்டையும் அழகையும் நேசிக்கும் மக்கள் சிலி மக்கள். தேச பக்தியும் ஜனநாயக உணர்வும் மிக்கவர்கள் சிலி மக்கள். உலகிலேயே அதிகமான அளவு தாமிர செப்புச் சுரங்கங்கள் அந்நாட்டிற்கு செல்வ வளம் கொழிக்கின்றன. ஆனால் அவை பல்லாண்டுகளாக ஏகாதிபத்திய பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளால் ஏகபோகமாக்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏகாதிபத்திய எடுபிடிகளான கிறித்துவ ஜனநாயகவாதிகளின் ஆட்சியில் சிக்கி அந்நாட்டின் விவசாயிகளும் தொழிலாளிகளும் வாழ்க்



படிப்பகம்

www.padippakam.com

தங்கயிருந்தான. அவன்என்னைத் தூக்கி உதைத்தபிறகு என்னைக் கற்பழித்தான.

கொஞ்சநேரத்துக்குப் பிறகு என்னை ஒரு வாகனத்துக்குள் தூக்கிப் போட்டார்கள். அதை வெகுதூரம் சுற்றிச் சுற்றி ஓட்டிப் போனார்கள். என்னை இறக்கி முழங்காலில் நிற்க வைத்தார்கள். நீ இங்கே சாக விரும்புகிறாயா, அல்லது சண்டையில் சாக விரும்புகிறாயா? என்று கேட்டுக் கொண்டே எனது நெற்றிப் பொட்டில் ஒரு துப்பாக்கிக் குழலை வைத்து அழுத்தினார்கள். சுட்டுக் கொல்லும் பாசாங்கு வேலை முடிந்ததும் செரோ நேவியாவில் உள்ள போலீஸ் நிலையத்துக்கு என்னை இழுத்துப் போனார்கள். சாண்டோ டோமிங்கோவில் உள்ள முதலாம்எண் பாலீஸ் நிலையத்துக்கு போய்ச் சேரும்வரை ஒவ்வொரு போலீஸ் நிலையமாக என்னை இழுத்துப் போனார்கள். அப்போது இரவாய் இருந்தது. காலையில் பஞ்ச முனைப்புமையத்தின் சிறைக்குக் கொண்டு போனார்கள். ஐந்து நாட்களுக்குப் பிறகு போதிய தடயம் இல்லைஎன்பதால் என்னை விடுதலை செய்தார்கள்.


சாதாரண வாழ்க்கைக்குநான் திரும்பிய பிறகு அதற்கு ஏற்றபடி என்னை பொருத்திக் கொள்வது காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் சிரமமானது. கொடிய கனவுகள், மனவேதனை, பணமுடை, தனிமை ஆகியவை ஒரு மனநோய் மருத்துவரை அணுகும்படி தள்ளின. நான் வாய்விட்டுக் கதறி அழுதுவிட வேண்டும் என்று அவர் சொன்னார். ஆனால் நான் அழவேவில்லை.

பிரச்சினையை எப்படி அணுகுவது என்று என்னுடைய காதலனுக்கு தெரியாமற்போனதால் அது மேலும் சிக்கலானது. என்னைப் பொருத்தவரை சிறைக் கொட்டடியில் நடந்தது பயங்கரமானது. ஆனால் நானும் எனது காதலனும் கூடியிருக்கும் போது அவன் மிகையான அக்கறை—கவனத்தோடு நடந்து கொள்ளும் போது அது இன்னும் படுபயங்கரமானதாய் இருந்த்தாகக் கண்டேன். எனக்கு எல்லாம் சரியாகிவிட்டது; உளவியல் ரீதியிலான சில பிரச்சினைகள் மட்டுமே இருக்கின்றன என்று அவனிடம் சொன்னேன். ஆனால் அவனோ தனது ஒவ்வொரு நடத்தையிலும், ஒவ்வொரு முறை தழுவும் போதும், ஒவ்வொரு வார்த்தையின் போதும் எனக்கு ஏதோ கெடுதல் செய்வதைப் போலவே கருதி நடந்து கொண்டான். அப்படி அவன் செய்வது போலீஸ் நிலையத்தில் நான் கழித்த ஒவ்வொரு வினாடியையும் நினைவுபடுத்துவதாக இருந்தது. அந்தக் கணத்திலிருந்து என்னுடைய உறவுகள் இருண்டு போய் விட்டன. எனக்கு நாமே இருள் கவ்வியதாகக் கருதவில்லை. சும்மா, எல்லாமே இருள் கவ்வியது; இருண்டு போனது.

ஒரு பெண்ணை அவர்களால் அழித்துவிட முடியும் என்று துப்பாக்கிப் படையினருக்குத் தெரியும். அவர்கள் அதைத்தான்செய்ய விரும்பினார்கள். இதை நான் ஆழமாக உணர்ந்தேன்—என்னிடமிருந்து ஏதாவது செய்தியைக் கறந்துவிட வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை; ஏனெனில், என்னிடம் எதுவும் இல்லை என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். எனக்குப் பயபீதியூட்டி என்னை செயலிழக்கச் செய்யவேண்டும் என்றே அவர்கள் விரும்பினார்கள். நான் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது; நான் கதறி அழுது கொண்டே அலையவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்தார்கள். ஒருமுறை ஒரு பேருந்திலிருந்து என்னை வெளியே இழுத்துப் போட்டார்கள். அது என்னுடைய பெற்றோர்களுடன் பிரச்சினையைக் கிளப்பிவிட்டது. அவர்கள் பயபீதியுற்றனர். அவர்கள் அனாதைகளாகி விட்டதாக உணர்ந்தார்கள். எனக்கிருந்த இரண்டே நண்பர்களையும் நான் இழந்தேன். வீட்டை விட்டு எங்கேயாவது ஓடிப்போ என்று என்னைத் துரத்தும் கட்டத்தை என்னுடைய தந்தை அடைந்தார். அந்த அளவு அவர் பயபீதியுற்றிருந்தார். ஆனால் அவர்களைத் தனியே விட்டு விட்டு என்னால் போக முடியாது. அவருக்கு வேலை கிடையாது; நான் வேலை செய்யாவிட்டால் வீட்டுக்கு யார் காசு சம்பாதித்துக் கொண்டு வருவார்கள்?

எனக்காக அவர்கள் வேதனைப்படுவதை நான் விரும்பவில்லை. எனக்கு என்ன நேர்ந்ததோ அதைவேறு எவரும் எப்போதும் அனுபவிக்கக் கூடாது. இதுதான் செய்ய வேண்டியது.

(சிலி மனித உரிமைகள் குழுமியத்திற்குத் தரப்பட்ட வாக்குமூலம். சிலி தலைநகர் சாண்டியகோ நகரிலிருந்து வெளிவரும் ‘‘அனாலிசிஸ்’’ —பகுப்பாய்வு என்கிற பத்திரிக்கையில் பிரசுரமானது.



கையை பெரும் வேதனையாகச் சுமந்தார்கள்.

ஆயுதந்தாங்கிய ஒரு புதிய ஜனநாயகப் புரட்சிக்கு சிலியின் மார்க்சிய—லெனினியப் புரட்சியாளர்கள் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் அமைதி வழியில் ஆட்சியைப் பிடித்து மக்களது அவலந் தீர்த்து சோசலிசத்தை மலர்விக்கப் போவதாகப் போலி கம்யூனிஸ்டுகளும் போலி சோசலிஸ்டுகளும் வாக்குறுதியளித்தனர். கூட்டணி அமைத்து 1971இல் நடந்த தேர்தலில் போட்டியிட்டனர். சோசலிஸ்டுக் கட்சித் தலைவர் சால்வடார் அலண்டே அரசுத் தலைவர் தேர்தலில் வென்றார். நாடாளுமன்றத் தேர்தல்களிலும் அந்தக் கூட்டணியை மக்கள் ஆதரித்தனர்.

சட்டச் சிக்கல்களைக் காட்டி பல மாதங்கள் இழுத்தடித்த பிறகு ஆட்சி ரிமை பெற்றது கூட்டணி. ‘‘இதோ! அமைதி வழியில் ஓட்டு முறையில் ஆட்சியைக் கைப்பற்றி விட்டோம். இனி சிலியை சோசலிசப் பூங்காவாக்கப் போகிறோம் ஆயுதப் புரட்சி தேவையில்லை; அமைதி வழியிலேயே சமூக மாற்றம் சாத்தியம் என்ற எங்களுடைய சித்தாந்தம் வென்றுவிட்டது’’ என்று எக்காள



படிப்பகம்

www.padippakam.com



என்னுடைய உடம்பு முழுக்க காயங்கள். என்னுடைய தசைகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. இசிவும் நடுக்கமுமான நிரந்தர நிலையிலேயே என்னுடைய உடம்பு இருந்தது. தோல் துண்டுகள் தொங்கிக் கொண்டும் சரியாகப் பேச முடியாதவாறும் என்னுடைய உதடுகள் கிழித்து நாசமான நிலையிலிருந்தன. கேப்டன் டெல்லஸ் தன்னுடைய கைத் துப்பாக்கியினால் நான்கு முறை சுட்டான். பிறகு இன்னும் இரண்டு ரவைகள் எஞ்சியிருக்கின்றன என்று என்னிடம் சொன்னான். அந்தக் கைத் துப்பாக்கியை எடுத்து எனது நெற்றிப் பொட்டில் வைத்து விசையைச் சோதிக்கும்படி செய்தான். அவனுடைய கேள்வி ஒவ்வொன்றுக்கும் எதிர்மறையில் நான் பதில் சொன்ன போதும் விசையை அழுத்தும்படி செய்தான்...

(ஆல்ஃபிரெடோ புருனோ மால்பிரிஷ் அளித்த வாக்கு மூலம். நியூயார்க் அமெரிக்கக் கண்காணிப்புக் குழு சமர்ப்பித்த அறிக்கை).

வென்றுவிட்டது'' என்று எக்காளமிட்டார்கள், சர்வதேச போலிக் கம்யூனிஸ்டுகள்.

சிலியில் ''சோசலிசத்தை மலர்விக்கும்'' பணியிலே போலிகள் இறங்கினர். தாமிர செப்புச் சுரங்கங்கள், வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டன. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோக விற்பனையை அரசு மேற்கொண்டது. விவசாயிகள்—தொழிலாளர்களின் ஊதியங்கள் உயர்த்தப்பட்டன. அதுவரை நிலப்பிரபுக்களுக்கும், தரகு அதிகார முதலாளிகளுக்கும் சேவை செய்து வந்த அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, சிறை மற்றும் நீதித்துறை ஆகிய அரசு எந்திரம் இனி சோசலிச சமுதாய நிர்மாணத்துக்குப் பணியாற்றும் என்று ஆட்சிக்கு வந்த போலிகள் நம்பினர்.

ஆனால் அது நிலப்பிரபுக்கள் தரகு அதிகார வர்க்க முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு ஆட்சியை நிலைகுலையச் செய்தது. போக்குவரத்துத் துறையையே ஸ்தம்பிக்கச் செய்தது. உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களில் பெரும் பற்றாக்குறையை ஏற்படுத்தினர். விலைகள் கிடுகிடுவென உயர்ந்தன. நகரங்களில் கலகங்களைத் தூண்டினர். குழப்பங்கள் – கலகங்கள் உச்ச நிலையை அடைந்தபோது சர்வதேச பன்னாட்டு பகாசுரக் கம்பெனியான ஐ.டி.டி.யும் அமெரிக்க உளவு படையான சி.ஐ.ஏவும் சதிசெய்து சிலியின் இராணுவத்தை ஏவின. போலிகள் ஆட்சிக்கு வந்த ஓராண்டுக்குள், 1973இல் திடீர் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு செய்தனர். அரசுத் தலைவராயிருந்த சால்வடார் அலண்டே உட்பட 5000 சிவிலியன்களை ஒரே நாளில் வேட்டையாடிக் கொன்றனர். உலகின் புரட்சிகர ஜனநாயக சக்திகள் கொதிப்படைந்தன. போலிக் கம்யூனிஸ்டுகளோ ஓலமிட்டு ஒப்பாரி வைப்பதற்கு மேல் எதுவும் செய்ய முடியவில்லை.

பாசிச இராணுவத் தளபதி பினோசெட் சிலியன் சர்வாதிகாரியானான். சிறைச்சாலைகள் நிரம்பி வழிந்தன. சிலியின் இளைஞர்கள் விரும்பி விளையாடும் கால்பந்தாட்ட மைதானங்கள் கூட திறந்த வெளிச் சிறைச்சாலைகள் ஆயின. பிறகு சிலி நாடு முழுவதுமே சித்திரவதைக் கூடமாகியது. கொலைகளமாகியது. பாசிச பினோசெட்டின் துப்பாக்கிப் படை. வெறிநாய்கள் தமது கண்ணில்பட்ட மக்களை எல்லாம் சதிகாரர்களாகக் கருதி கடித்துக் குதறியது. அதன் சித்திரவதையில் சிக்கிய மூன்று பேரின் நேரடிப் பேட்டிகள் இவை.

ஜேகோபோ டைமர்மேன் எழுதிய ''சிலி: தெற்கிலே சாவு'' என்கிற நூலில் உள்ளவை, இந்தப் பேட்டிகள். ''பெயரில்லாத ஒரு கைதி, எண்ணில்லாத ஒரு சிறைக் கொட்டடி'' என்கிற திரைப்படத்தில் துணிச்சல் மிகு அர்ஜண்டினா நாட்டுப் பத்திரிக்கை ஆசிரியர் ராய் ஷ்னெய்டர் என்ற பாத்திரத்தில் நடித்தவர், ஜேகோபோ டைமர்மேன். அதன் மூலம் ஒரு படுபயங்கரமான, கொடூரமான தென் அமெரிக்க அரசு பற்றி உலகக் கவனத்தை ஈர்த்தவர். இப்போது சிலியில் பாசிச பினோசெட் ஆட்சியின் அக்கிரமங்களை இந்நூலில் எழுதியுள்ளார்.

உலகம் முழுவதும் மனித உரிமை பற்றி வாய் கிழியப் பேசுகிறார்கள் அமெரிக்க மற்றும் மேற்கு ஏகாதிபத்தியவாதிகள். அதே சமயம் தூரக்கிழக்கிலே தென்கொரியா முதல் மேற்குக் கோடியிலே சிலி வரை பாசிச அரசுகளை-பாசிச அடிவருடிகளைத் தமது செல்லப் பிள்ளைகளாக வைத்து ஆதரிக்கின்றனர். ஆட்சிக் கவிழ்ப்பு செய்யவும் பாசிச ஓநாய்களை ஆட்சியில் அமர்த்தவும் இரவு பகலாக அலைகின்றன அவர்களுடைய சி.ஐ.ஏ. கழுகுகள்.

சிலியிலும் அதையடுத்து மற்றொரு தென் அமெரிக்க நாடான பொலிவியாவிலும் இத்தகைய பாசிச ஆட்சிகளையும் படுகொலைகளையும் கண்ட பின்னும் ''ஓட்டு முறை அமைதி வழி மாற்றம் சாத்தியம்'' என்று உபதேசிக்கிறார்கள் சர்வதேசப் போலிக் கம்யூனிஸ்டுகள்.

உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டும் ஆளும் வர்க்கங்கள் ஓட்டு முறையில்-அமைதி வழியில் தமது ஆட்சி அதிகாரத்தை ஒருபோதும் ஒப்படைக்க மாட்டா. நாடாளுமன்ற-சட்டமன்ற அமைப்புகளில் பெரும்பான்மையைக் கைப்பற்றி உழைக்கும் மக்கள் ஆட்சி உரிமை கோருவார்களேயானால் அதிகாரவர்க்கம், இராணுவம், போலீசு, நீதித்துறை ஆகியன அடங்கிய அரசு எந்திரம் என்கிற இராட்சதனை ஏவிப் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விடுவார்கள். பாசிச ஆட்சியை நிறுவுவார்கள். ஆகவே ஆயுதந்தாங்கிய புரட்சி தவிர வேறு எந்த வழியிலும் உழைக்கும் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. இந்த உண்மையின் இரத்த சாட்சிகளாக விளங்குகிறார்கள் சிலி மக்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

# அரிதாரம் கலைகிறது

தமிழக அரசியலின் பண்பாட்டுத் தரம் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியிருக்கின்றனர் ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளும, பத்திரிக்கைகளும். அரசியல் தரம் தாழ்ந்து போகிறதே என்று அத்தனை பேரும் அங்கலாய்க்கிறார்கள். இந்த வேதனையில் கூசிப்போய் துடிப்பதாக நடிக்கிறார்கள். அதே சமயம் கீழ்த்தரமான ஆபாச - அரசியல் பேசும் பிரச்சார பீரங்கிகளுக்கெல்லாம் வேண்டிய தீனி போட்டு முழு மூச்சில் முடுக்கிவிடுகின்றன, பிரதான ஓட்டுக்கட்சிகள். அவர்கள் வாந்தி எடுத்ததையெல்லாம் அப்படியே பிடித்து பத்தி பத்தியாக நிரப்பிக் காசாக்கிக் கொள்கின்றன பிரபல பத்திரிக்கைகள். பொறுக்கி அரசியலின் ஆதரவாளர்களுக்கோ கொண்டாட்டமாயிருக்கிறது. ஆபாசப் புத்தகங்களை வாங்கி இரகசியமாய் படித்துக் கொண்டிருந்த விஷயங்கள் அரசியல் சமூக வாரப் பத்திரிக்கைகளில் பகிரங்கமாக வருகின்றன இரவு இரண்டாவது ஆட்டம் சினிமாப் பார்த்து விட்டுப் போவதைப் போல ஆபாச—அரசியல் பேச்சுக்களை ரசித்துவிட்டு வீடு திரும்புகிறார்கள்.

தமிழ்நாட்டு அரசியல் மேடைகளை, தமிழ்நாட்டுப் பத்திரிக்கைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும், ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் பொறுக்கி அரசியலின்—ஆபாச அரசியலின் நாயகி ஜெயலலிதா. நாயகன் எம்ஜிஆர். எழுபது வயது வரை மட்டுமல்ல, இறந்த பின்னும் கதாநாயகனாக விளங்குகிறார் எம்ஜிஆர். ஜெயலலிதாவுக்கும் எம்ஜிஆருக்கும் என்ன உறவு? ஜெயலலிதா ஒரு விபச்சாரியா இல்லையா? என்பதே இன்றைய அரசியலின்—கதையின் மையக் கரு!

ஜெயலலிதா—ஜானகி சக்களத்திச் சண்டை துவங்கியதிலிருந்து . வீரப்பன் — ஜானகி கும்பல் பத்திரிக்கைகள் மூலமாகவும், மேடைகளிலும் பின்வரும் கருத்தைப் பிரச்சாரம் செய்து வருகிறது.

● ஜெயலலிதா ஒரு விபச்சாரி. ஒழுக்கக் கேடானவள். தெலுங்கு நடிகர் சோபன்பாபு, எம்ஜிஆர் ஆகியோருக்கு வைப்பாட்டியாக இருந்து வந்தாள். அது மட்டுமல்ல, கர்நாடக சாராய வியாபாரி விஜய் மல்லையா, சினிமா நடிகர் எஸ். எஸ் ராஜேந்திரன், ஜேப்பியார், மந்திரி திருநாவுக்கரசு உட்பட பலரிடமும் இரகசிய உறவு வைத்திருந்தார் பல அரசியல் கட்சிப் பிரமுகர்களும் அவரை வைப்பாட்டியாக வைத்திருந்தனர்.

● ஒழுக்கக்கேடு காரணமாக ஜெயலலிதாவுக்கு மிக மோசமான, தீராத இரகசிய நோய் இருக்கிறது. அவருக்கு ஊனமுடைய பெண் குழந்தை உண்டு. ஜெயலலிதா இரகசிய உறவு வைத்திருக்கும் பெரும்பணக்காரர்களின் கருப்புப்பணத்தைக் கோடி கோடியாக மறைத்து வைத்திருக்கிறார். ஜெயலலிதாவின் இரகசிய வாழ்க்கை எம்ஜிஆருடன் இருந்த உறவு உட்பட அனைத்தும் போலீசாருக்கும், அரசியல் தலைவர்களுக்கும் முன்பே தெரியும்.




'அண்ணா', அக். 86

● எம்ஜிஆர் தன்னுடன் நடித்த சரோஜாதேவி, மஞ்சுளா, லதா போன்ற நடிகைகளுடன் இரகசிய உறவு வைத்திருந்தார். அப்படி அவர் கெட்டுப் போனதற்குக் காரணம் ஜெயலலிதாதான். யோக்கியராகவும் கூச்ச சுபாவமும் உடையவராய் இருந்த எம்ஜிஆருக்கு தைரியம் கொடுத்து கெட்டுப் போக வைத்துவிட்டார், ஜெயலலிதா. தனது இரகசிய உறவை வெளியே சொல்லி அசிங்கப் படுத்திவிடுவார் என்று எம்ஜிஆர் பயந்து கொண்டிருந்தார். இதனால் எம்ஜிஆரைக் கண்டபடி நேரிலேயே திட்டக் கூடிய தைரியம் ஜெயலலிதாவுக்கு இருந்தது. ஜெயலலிதாவின் ஆபாச—தொந்தரவு தாங்க மாட்டாமல்தான் எம்ஜிஆர் இறந்து போனார்.

—இவை வீரப்பன்—ஜானகி கும்பலின் நாலாந்தரப் பேச்சாளர்கள் செய்யும் பிரச்சாரம் மட்டுமல்ல. வீரப்பன், காளிமுத்து உட்பட அதன் தலைவர்கள் அன்றாடம் செய்யும் பிரச்சாரம்.

அரசியல் எதிரியான ஜெயலலிதாவைத் தனிப்பட்ட முறையில் தாக்கி கேவலப்படுத்தவேண்டும் என்கிற நோக்கத்தில் ஏதோ வீரப்பன்—ஜானகி கும்பல் செய்யும் அவதூறுகள்தான் இவை என்று கூறவும்கூடியாது. இன்று வரை ஜெயலலிதா கும்பலின் சூத்திரதாரியாக இருந்து இயங்கும் பண்ருட்டி ராமச்சந்திரன் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

● ஜெயலலிதா எம்ஜிஆரின் இரண்டாவது மனைவியாக இருந்தார். அவர்களிடையே ஒருவகையான ஊடலும் கூடலும் கலந்த உறவு இருந்தது. ஜெயலலிதாவுடன் சேர்ந்து இருப்பதையே எம்ஜிஆர் விரும்பினார். ஜெயலலிதாவை இழப்பதற்கு எம்ஜிஆர் என்றுமே தயாராய் இருந்ததில்லை.

டெல்லியில் ஜெயலலிதா தங்கியிருந்த ஓட்டல் அறைக்கு பண்ருட்டி ராமச்சந்திரனே எம்ஜிஆரைக் கூட்டிப் போய் விட்டு விட்டு வந்திருக்கிறார்.

www.padippakam.com

எம்ஜிஆரின் வைப்பாட்டியாக ஜெயலலிதா வாழ்ந்ததையும், பண்ருட்டி ராமச்சந்திரனே அதற்குத் தரகனாக இருந்து கூட்டிக் கொடுத்ததையும் நாகரிகமான—நாசுக்கான முறையில் ஒப்புக் கொள்ளுகிறார்.

● ஜெயலலிதாவின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய குற்றச்சாட்டுகள் எம்ஜிஆருக்குத் தெரிந்தவைதான். தெரிந்தும்எம்ஜிஆரே அவற்றையெல்லாம் மறந்து மன்னித்தவைதான். எம்ஜிஆரையே நேரில் திட்டும்அளவு ஜெயலலிதாவுக்கு அவரிடம்உறவு இருந்தது. எம்ஜிஆருடன் நெருங்கிப் பழகி அவருடைய அந்தரங்க வாழ்க்கையை அறிந்தவர் என்கிற உரிமையோடு இவற்றைப் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறுகிறார்.

அதாவது ஜெயலலிதாவின் ஒழுக்கக்கேடுகள் உண்மைதான். அவற்றையெல்லாம் எம்ஜிஆர் மறந்து மன்னித்து விட்டார்.




மீண்டும் கிளப்புவது நியாயமாகாது என்று கூறுகிறார்.

ஜெயலலிதாவே தன்னுடைய மற்றபிற இரகசிய வாழ்க்கையைக் கிளறக்கூடாது என்றுதான் நினைக்கிறார். ஆனால் எம்ஜிஆரின்வைப்பாட்டியாக, அதாவது இரண்டாவது மனைவியாக வாழ்ந்து, எம்ஜிஆர் சாவுக்குப் பிறகு அநாதையாகிவிட்ட இளம் விதவை என்றுதான் தன்னை சித்தரித்துக்கொள்கிறார். அந்தஅடிப்படையில்தான் வாரிசுரிமையும், அனுதாபமும், அதிகாரமும் பெற முயலுகிறார்.

தன்னுடைய ஆபாச அந்தரங்க வாழ்க்கையைப் பற்றிக் கிளறும்போது மட்டும் ஆவேசமும் ஆத்திரமும் கொள்ளும் ஜெயலலிதா, ஜானகியினுடைய சொந்த வாழ்க்கையை அலசுவதற்கு மட்டும் தவறுவதில்லை. 'ஜானகி ஒன்றுந் தெரியாத பாப்பாவைப் போல நடிக்கிறார், ஜானகியின் முதல் கணவனுக்குபிறந்த மகன் மற்றும் உறவினர்களோடுசேர்ந்து எம்ஜிஆரின் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டார். அதற்காக எம்ஜிஆருக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டு, இறந்தவரின் கை ரேகை வைத்து மோசடியான உயில் தயாரித்துக் கொண்டார். ஜானகியும்கூட எம்ஜிஆரின் சட்டபூர்வ மனைவி அல்ல; வைப்பாட்டிதான்' என்று ஜெயலலிதா பிரச்சாரம் செய்கிறார்.

ஜெயலலிதா— எம்ஜிஆர்— ஜானகி மற்றும் அவர்களோடு சம்பந்தப்பட்ட ஆபாச அந்தரங்க வாழ்க்கையைப்பற்றிமட்டுமல்லாது அவர்கள் அடித்த பகற்கொள்ளைகள் பற்றியும் ஒருவருக்கொருவர் குற்றஞ் சாட்டிக் கொள்கிறார்கள். கோடி கோடியாக அவர்கள் செய்த லஞ்ச ஊழல்கள் பற்றி எம்ஜிஆருக்கும் போலீசுக்கும் தெரியும். இயலாமையால் எம்ஜிஆர் வருந்தினார்; அழுதார்; லஞ்ச ஊழல் பேர் வழிகளின் பதவிகளைப் பறித்தார் என்று ஒருவர்மீது ஒருவர் குற்றஞ் சொல்லுகிறார்கள்.

எம்ஜிஆர் கட்சியின் இரண்டு கும்பல்களும் இப்படிப் பேசுவதால் அரசியல் தரம் கெட்டுப்போகிறது; இது ஆரோக்கியமான அரசியல் போக்கு இல்லை; இரண்டு தரப்புகளும் அடித்துக் கொண்டு எம்ஜிஆரின் பேரை—புகழைக் கெடுக்கிறார்கள் என்று நடுநிலை வேஷம் போடும் பிரமுகர்களும் பத்திரிக்கைகளும் ஒப்பாரி வைக்கின்றனர்.

பாசிச எம்ஜிஆரின் ஆபாச வக்கிர வாழ்வு மற்றும் லஞ்ச ஊழல் பற்றி வெளிப்படையாக அலசுவதால்தான் அரசியல்—பண்பாட்டுத் தரம் தாழ்ந்துபோகிறதா? அந்தக் கும்பலின் நடத்தையே அல்லவா அப்படிக் கீழ்த்தரமானதாக இருந்திருக்கிறது!

பத்தாண்டுகள் முதல் மந்திரியாய் இருந்தவர் அறுபது வயதில் நான்காவதாக ஒரு மனைவியை—வைப்பாட்டியை வைத்துக்கொண்டதும், தன்னுடன் நடித்த நடிகைகளுடன் ஆபாசவக்கிர வாழ்வு வாழ்ந்ததும் கீழ்த்தரமானதில்லையா? இதெல்லாம் தனிப்பட்ட விவகாரம், அரசியல் மேடைக்கு வரக்கூடாது என்றால் கருணாநிதி முதல்வராய் இருந்தபோது தர்மாம்பாள் என்கிறவரை வைப்பாட்டியாக வைத்திருப்பதையும் அவர்களுக்குகனிமொழிஎன்றொரு பெண் இருப்பதையும், அவர்களுக்கு ஒரு மாளிகையும் போலீசு காவலும் போட்டிருந்ததும் பற்றி பிரதமர்–ஜனாதிபதி வரை புகார் மனுக்கொடுத்து ஆட்சியைக் கவிழ்க்கும்படி இதே எம்ஜிஆர் தானே காவடி தூக்கினார்? ஏகாதிபத்திய சீரழிவில் மிதக்கும் அமெரிக்கா, இங்கிலாந்தில்கூட அரசியல் தலைவர்கள் ஒழுக்கம் இன்னமும் பிரச்சினையாகி பதவி பறிபோகிறது. இங்கே ஒழுக்கக் கேடுகளின் வக்கிரங்களின் மொத்த உருவான எம்ஜிஆருக்கு ''பாரத ரத்னா'' விருது அளிக்கப்படுகிறது. இந்த நபரின் ''புகழுக்குக் களங்கம் ஏற்படுகிறது'' என்றால் இவரைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள போலித்தனங்கள் விலகுகின்றன. அரிதாரம் கலைகிறது. உண்மை தெரிகிறது என்றுதான் பொருள்.

லஞ்ச ஊழலை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டு ஆட்சிக்கு வந்த பாசிச எம்ஜிஆர் கும்பல் கோடி கோடியாக பகற்கொள்ளை அடித்துக் குவித்து வைத்துள்ளது. இது எம்ஜிஆருக்கும் இரகசிய போலீசு உட்பட அரசுக்கும் தெரியும். அவர்களும் பங்கேற்றிருக்கிறார்கள். இந்தக் கிரிமினல் குற்றவாளிகளைத் தண்டிக்கவும், இவர்களுடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்யவும் கோருவதற்குப் பதில் நடுநிலை வேஷம் போடும் பிரமுகர்களும் பத்திரிக்கைகளும் அரசியல் தரம்குறைந்து போவது குறித்து ஊளையிடுகிறார்கள்.

இதெல்லாம் எம்ஜிஆர் கட்சியால் வந்தவை; கருணாநிதி ஒரு நாகரீகமான, கை தேர்ந்த, ராஜதந்திரி—அரசியல் தலைவர் என்று கூறி கருணாநிதிகட்சியினர்


படிப்பகம்

www.padippakam.com

பிரச்சாரம் செய்கிறார்கள். ஆபாச—வக்கிர அரசியல் திராவிட பாரம்பரியத்துக்கு ஒன்றும் புதிதல்ல இளைஞர்களை ஈர்ப்பதற்கு ''கவர்ச்சி'' என்கிற பெயரில் ஆபாச—வக்கிர அரசியலை துவங்கி வைத்தவர்களே அவர்கள் தான். இதற்கென்றே திறமை வாய்ந்த வண்ணை ஸ்டெல்லா தீப்பொறி ஆறுமுகம் போன்ற நாலாந்தரப் பிரச்சாரகர்களை உருவாக்கி இருக்கிறார்கள். திராவிட இயக்கத் தலைவர்களே இதற்கு முன்னோடிகளாக இருந்து வழிகாட்டினார்கள்.

நடிகை பானுமதிக்கும் அண்ணாதுரைக்கும் இரகசிய உறவிருப்பதாக காங்கிரசார் பிரச்சாரம் செய்தபோது, 'அவர் படிதாண்டா பத்தினியும் அல்ல. நானும் முற்றும் துறந்த முனிவனும் அல்ல'' என்று அண்ணாதுரை பதில் சொன்னார். ''திராவிடநாடு திராவிட நாடு என்கிறீர்களே எங்கே இருக்கிறது திராவிட நாடு'' என்று காங்கிரசு எம்எல்ஏ அனந்த நாயகி கேட்டதற்கு கருணாநிதி சொன்ன பதில் ஆபாசமானதில்லையா? கண்ணதாசன் எழுதிய வனவாசம் நூலே திராவிட இயக்கத் தலைவர்களின் குறிப்பாக கருணாநிதியின் ஆபாச வக்கிர வாழ்வுக்கு' அத்தாட்சியாக விளங்குகிறது. சட்டச் சிக்கல்கள் வந்து விடும் என்றஞ்சி, ''என் மகள் கனிமொழியின் தாய் தர்மாம்பாள்'' என்று அப்போது முதல்வராய் இருந்த கருணாநிதி சட்டசபையிலே சொன்னாரே அந்த கருணாநிதி—தர்மாம்பாள் உறவு எந்த வகையிலானது. ''ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் தமிழ் பண்பாடு'' என்று மேடையில் பேசிவிட்டு மனைவி வீட்டுக்குப் போவதா வைப்பாட்டி வீட்டுக்குப் போவதா என்று குடிபோதையில் தடுமாறும் திராவிட இயக்கத் தலைவர்கள் எத்தனை பேர்! இப்படிப்பட்ட திமுக மந்திரி அன்பில் தர்மலிங்கத்தின் விவகாரத்தை கேலி செய்ததால்தானே திருச்சி கிளைவ் விடுதி மாணவர்கள்மீது போலீசை ஏவி துப்பாக்கி சூடு நடத்தி, விடுதியைச் சூறையாடிப் படுகொலை செய்தது திமுக ஆட்சி.


''இது ஏதோ திராவிட இயக்கத்துக்கே உரிய பண்பு;திராவிடக் கட்சிகள் பிளவுபடும் போதெல்லாம் இப்படி நடக்கிறது... அகில இந்திய தேசியக் கட்சிகள் யோக்கியமானவை; அவை பிளவுபட்டபோது இவ்வளவு கீழ்த்தரமாகப் போகவில்லை'' என்று துக்ளக் சோ தலையங்கம் தீட்டியுள்ளார். குடித்துவிட்டு விமானப் பணிப்பெண் கையைப் பிடித்து இழுத்தார் மகாராஷ்டிரா துணை முதல்வர் ராமராவ் அதிக் (அப்போது பதவி பறிபோய் இந்த மாதம் மீண்டும் பதவி பெற்றுள்ளார்) அறுபது வயதான ராஜஸ்தான் காங்கிரசு மந்திரி மருத்துவ சிகிச்சைக்கு வெளிநாடு போனபோது தனது மனைவியைவிட்டு விட்டு வைப்பாட்டியை மனைவி என்று பொய் சொல்லி அழைத்துப் பேரய் பிடிபட்டார்; ஏழு விபச்சாரிகளுடன் கல்கத்தாவில் கைதான பீகார் காங்கிரசு எம்பி; டில்லியில் பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டு அடித்துக் கொல்லப்பட்ட மகாராஷ்டிரா காங்கிரசு எம்எல்ஏ. இடமாற்றத்துக்கு உதவி கோரி வந்த பெண்ணைக் கற்பழித்த மத்தியப் பிரதேச காங்கிரஸ் எம்எல்ஏ; ஐ.பி.எஸ் அதிகாரியின் மனைவியை வைப்பாட்டியாக வைத்திருந்து தகராறு ஏற்பட்டு பல அடுக்கு மாளகையில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ள காரணமாயிருந்த காங்கிரசு எம்பி. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரிசா முதல்வர் பட்நாயக்கின் ஆபாச வக்கிர வாழ்வு இவையெல்லாம் 'துக்ளக் சோ'வுக்குத் தெரியாதா?

ஜனதாக் கட்சிபிளவின்போது ஜனதா தலைவர் ஜகஜீவன் ராமின் அரசியல் வாரிசாக உருவாக்கப்பட்ட அவருடைய மகன் சுரேஷ்குமார் தனது வைப்பாட்டியுடன் நிர்வாணமாக எடுத்துக் கொண்டு புகைப்படங்களை மற்றொரு ஜனதாத் தலைவர் சரண்சிங்—ராஜ் நாராயணன் கும்பல் வெளியிட்டத்தையும் இந்திராவின் மகன் சஞ்சய் காந்தியும்—மேனகாவும் தமது பத்திரிக்கையில் அதைப் பிரசுரித்ததும் கீழ்த்தரமான அரசியல் இல்லையா?

திராவிட இயக்கத்தின் தலைவர்களுக்கு ஒரு ஆபாச வக்கிர வாழ்வு இருப்பதைப்போல தேசியத் தலைவர்களுக்கும் உண்டு. ஆனால் அது ''கோமான்களின் மாளிகைக் கழிப்பறைகளும் மணக்கும்'' என்பதாக தேசியவாதிகளால் பீற்றிக் கொள்ளப்படுகிறது. இருபுறமும் இரு இளம் பெண்களுடன் நிர்வாணமாகப் படுத்துக்கிடந்தார் காந்தி என்றால் அது ஆபாசமே—வக்கிரமே அல்ல—சத்திய சோதனையாம்! மௌவுன்ட்பேட்டனின் மனைவி எட்வினா நேரு இரகசியஉறவு வைத்திருந்தால் அது உன்னதமான நட்பாம்! அதே போன்ற நேரு மாமாவின் விளையாட்டுகள் அவருடைய மகிமையாம்! ஆகவே இதிலே தேசியம், திராவிடம் என்கிற வேறுபாடில்லை. பாரதப் பண்பாடு, தமிழ்—திராவிடப் பண்பாடு எல்லாம் ஊருக்குத்தான் அவர்கள் உபதேசிப்பார்கள். தங்களுக்கில்லை.

இதையெல்லாம் மக்கள்மறந்துவிட வேண்டும்; மக்களிடமிருந்து மறைத்துவிட வேண்டும்;அம்பலத்துக்கு வந்தால் அரசியல்—பண்பாட்டுத்தரம் குறைந்து விடும் என்று கூப்பாடு வைக்கிறார்கள். ஒழுக்கத்தோடும் யோக்கியமாகவும் நடந்து கொண்டு நாடாளுமன்ற ஜனநாயகத்தை அதன் தரத்தைக் கட்டிக் காக்க முடியும் என்று ஓட்டுக்கட்சி தலைவர்களும் பத்திரிக்கைகளும் நம்பவில்லை; அதற்காகமுயலவில்லை. ஒழுக்க சீலர்களாகவும், யோக்கியவான்களாவும் நடிப்பதன் மூலம் மட்டுமே நாடாளுமன்ற ஜனநாயகத்தை—அதன் தரத்தைக் காப்பாற்ற முடியும் என்று நம்புகிறார்கள். நாடாளுமன்ற ஜனநாயகம் அதன் இழிந்த இறுதி வடிவமான பொறுக்கி அரசியலாக சீரழிந்த பிறகு அதன் பண்பாட்டுத்தரம் மட்டும் எப்படி உயர்ந்ததாக இருக்க முடியும்?

※ மாணிக்கவாசகம்





**ஜெயலலிதாவுடன் காங்கிரஸ் கூட்டு உறுதியாகாதபோது பம்பாயின் காங். ஆதரவு ஏடு வெளியிட்ட ஆபாச கேலிப்படம்**

படிப்பகம்

# தொழிற்தகராறு மசோதா!

www.padippakam.com




**தொ**ழிலாளி வர்க்கத்தின் குரல்வளையை நெறிக்கும் இன்னுமொரு சுருக்குக் கயிற்றை பாசிச ராஜீவ் கும்பல் சமீபத்தில் ஏவியுள்ளது. தொழிலாளர்கள் சங்கமாக சேருவதற்கான உரிமை, கூட்டாக போராடுவதற்கான உரிமை, வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை முதலான அனைத்தையும் பறிக்கும் புதிய கருப்பு மசோதாவை கடந்த மே 13ல் ராஜ்ய சபையில் பாசிச கும்பல் கொண்டு வந்துள்ளது.

ஏற்கெனவே ஜனதா அரசு தொழிலுறவு மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபோது தொழிலாளர்களின்—தொழிற் சங்கங்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பால் முறியடிக்கப்பட்டது. அதன்பிறகு ஏறத்தாழ 9 ஆண்டுகளுக்குப்பிறகு மீண்டும் தொழிலாளி வர்க்கத்தின்மீது அரசும் முதலாளிகளும் வெளிப்படையாகப் பாயத் தொடங்கியுள்ளனர்.

மே 13 அன்று ராஜ்ய சபாவில் கடைசி நேரத்தில் அவசரமாக இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டது. இம்மசோதா கொண்டு வரப்படுவது பற்றி எவ்வித முன்னறிவிப்புமில்லை. உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே பிரதிகள் தரப்படவில்லை. பின்பற்றிக் கொள்ளப்படும் பாராளுமன்ற விதிமுறைகளை அறவே புறக்கணித்துவிட்டு பாசிச முறையிலேயே இம்மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளது ராஜீவ் கும்பல்.

காலனியாதிக்க வாதிகளின் 1926ம் ஆண்டின் தொழிற்சங்க சட்டப்படிகூட ஏழு தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் அமைக்கலாம். இப்போதைய மசோதா அதையும் பறித்து விட்டது. மொத்த தொழிலாளர்களில் 10 சதவீதம் இருந்தால்தான் ஒரு தொழிற்சங்கம் அங்கீகரிக்கப் படும். இந்த உறுப்பினர்எண்ணிக்கையும் கூட செக்-ஆப் முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு தொழிலாளியும் நான் இந்த சங்கத்தின் உறுப்பினர் என்று எழுத்து பூர்வமாக அறிவிக்க வேண்டும்.

ஒரு புதிய புரட்சிகர சங்கத்தை நாளை நிறுவ வேண்டுமானால் 10 சதவிதத்தொழிலாளர்களின் ஆதரவைப் பெறுவதென்பது துவக்க காலத்தில் அறவே சாத்தியமில்லை. புதிய சங்கம் கிடக்கட்டும்; ஏற்கெனவே உள்ள கொட்டை போட்ட பெரிய தொழிற்சங்கங்களால்கூட இந்த விதியை நிறைவேற்ற வாய்ப்பே இல்லை.

உதாரணமாக. பொகாரோ இரும்பு—எஃகு ஆலையில் 50,000 தொழிலாளிகள் பணி புரிகின்றனர். இங்கு சிறியதும் பெரியதுமாக 65 தொழிற்சங்கங்கள் உள்ளன. பாசிச கும்பலின் புதிய மசோதாவின்படி ஒவ்வொரு சங்கமும் 10 சதவீதம்—அதாவது 5,000 தொழிலாளிகளை உறுப்பினராகக் காட்ட வேண்டும். 65 சங்கங்களும் இவ்வளவு உறுப்பினர்களைக் கணக்கு காட்ட ஒருக்காலும் சாத்தியமே இல்லை. மொத்தத்தில் தொழிற் சங்கங்களின் எண்ணிக்கையைப் பாசிச முறையில் குறைக்கும் முயற்சியே இது.

இதோடு செக்-ஆப் முறைப்படி, நான் இந்த சங்கத்தைச் சேர்ந்தவன் என்று தொழிலாளி எழுதிக் கொடுப்பதன் மூலம் நிர்வாகமும் அரசும் அச்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளியைப் பழி வாங்குவதென்பது சுலபம். இது மட்டுமின்றி பெரிய—துரோகத் தொழிற்சங்கங்களின் குண்டர்கள் வளர்ந்து வரும் சிறிய புரட்சிகரமான சங்கங்களின் உறுப்பினர்களை இனங்கண்டு பழி வாங்குவதும், தாக்குவதும் சர்வ சாதாரணமாகி விடும்.

அடுத்தது, இம்மசோதா நிறைவேற்றப்பட்டபின், உடனடியாக ஆறு மாதங்களுக்குள் 10 சதவித உறுப்பினர் எண்ணிக்கையை ஒவ்வொரு சங்கமும் காட்ட வேண்டும். இல்லையேல் அதன் அங்கீகாரம் பறிக்கப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக சட்ட விரோதமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் (பொதுவாக எல்லா வேலை நிறுத்தங்களும் சட்ட விரோதம்தான்!) சங்கங்களின் அங்கீகாரம் 6 மாதங்களுக்கு மறுக்கப்படும். மீண்டும் அச்சங்கம் 10 சதவீதத் தொழிலாளர்களின் ஆதரவைக் காட்டித்தான் அங்கீகாரம் பெற முடியும்.



படிப்பகம்

www.padippakam.com




## மஞ்சள் பத்திரிக்கையின் அண்டப் புளுகு

அரசியல் மஞ்சள் பத்திரிக்கை ஜூனியர் விகடன், 15-6-88 தேதியிட்ட, இதழில், 'தமிழ்நாட்டில் தீவிரவாத இயக்கம்', 'முந்திரிக்காட்டில் பயங்கரவாதிகள்?', 'தமிழரசன் சாகவில்லை!' என்ற தலைப்பில் பரபரப்பாக அட்டைப் படக் கட்டுரையை வெளியிட்டுள்ளது. 'முந்திரிக்காட்டில் திடீர் ஆயுதப் புரட்சி...?' 'வெடிகுண்டு சம்பவங்கள் தொடருமா?' என்று உள்தலைப்பிட்டு நான்கு பக்க அளவில் ஒரு நாலாந்தர தமிழ் சினிமா கதைக்கருவுக்குப் பொருத்தமான 'திகில்' கதையை எழுதியுள்ளது.

திருச்சி—தென்னாற்காடு மாவட்டங்களைப் பிரிக்கும் வெள்ளாற்றங்கரையிலுள்ள முந்திரிக்காடுகளில் 'தனித் தமிழ்நாடு' கோரும் தீவிரவாத இயக்கத்தினர் பதுங்கிக் கொண்டு ஆயுதப் புரட்சிக்கான தயாரிப்பில் ஈடுபடுகிறார்களாம். அவர்களது கொலை—கொள்ளை நடவடிக்கைகளால் பகுதி மக்களும், ஏன் போலீசும் கூட நடுங்குகிறதாம். இப்படி ஒரு கட்டுக் கதையை பரபரப்பான செய்தியாக்கி வாசகர்கள் காதிலே பூவைச் சுற்றியுள்ளது ஜூ.வி. எழுத்துலக விபச்சாரிகளின் கதைகளில் வரும் திகில் சம்பவங்களைக் காப்பியடித்து இக்கட்டுரையை ஜூ.வி. உருவாக்கியிருக்கிறது என்பதற்கு அக்கட்டுரையில் கூறப்படும் சம்பவங்களே சாட்சி பகருகின்றன.

கட்டுரையின் உச்ச கட்டமாக தமிழரசன் இன்னும் சாகவில்லை என்று தமிழரசனின் தாயிடமே வாக்குமூலம் வாங்கி ஆதாரத்துடன் இச்செய்தியை வெளியிடுவதாகச் சொல்லி வாசகர்களை முழு முட்டாளாக்கியிருக்கிறது. பாசத்தைக் கொட்டி வளர்த்த தம் அன்பு மகன் திடீரென இறந்துவிட்டால் எந்தத் தாயாலும் தாங்கிக் கொள்ள முடியாது. மீளாத் துயரத்தின் நடுவே, தன் மகன் எப்படியாவது திரும்பவும் உயிரோடு வரமாட்டானா என்று ஏங்கித் தவிப்பார்கள். ஒரு தாயின் இயல்பான பாச உணர்வைக் கொச்சைப்படுத்தி அதையே தன் செய்தியின் ஆதாரமாக்கி பரபரப்பாக விற்றுக் காசாக்கியிருக்கிறது, ஜூ. வி.

அரசியல் கிசுகிசுக்களை விற்றுக் காசாக்கிப் பிழைக்கும் ஜூ. வி. இப்படியொரு கட்டுக் கதையை வெளியிட்டிருப்பதற்குக் காரணம் இல்லாமலில்லை. வளர்ந்து வரும் புரட்சிகர அமைப்புகளின் செல்வாக்கைக் கண்டு பீதியடையும் அதிகார வர்க்க போலீசு கும்பல், புரட்சியாளர்களைக் கொள்ளையர்களாக அவதூறு செய்யவும், மக்களிடம் பயபீதி ஏற்படுத்தவும் இவ்வாறான அண்டப்புளுகை ஜூ. வி.க்கு செய்தியாகக் கொடுத்திருக்கிறது. அதை அப்படியே வாந்தி எடுத்து, திகில் கதையாக மாற்றி வெளியிட்டு தன் விசுவாசத்தை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ஒரு பத்திரிக்கைக்குரிய குறைந்தபட்ச யோக்கியதைகூட இல்லாமல் போயும் போயும் போலீசு அவிழ்த்துவிடும் அண்டப்புளுகை அப்படியே கட்டுக் கதையாக்கி வெளியிடுகிறது என்றால் ஜூ. வி.யில் வெளியாகும் மற்ற செய்திகளின் யோக்கியதை பற்றி சொல்ல வேண்டியதில்லை. தூ! காறி உமிழுங்கள் இந்த கழிசடை பத்திரிக்கை மீது!

---

இப்புதிய மசோதாவின்படி தொழிற்சங்க சந்தாவை நிர்வாகமே தொழிலாளியின் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொடுத்துவிடும். இப்போதுகூட பல மஞ்சள் தொழிற்சங்கங்கள் இந்த ஏற்பாட்டை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதன்மூலம் தொழிற்சங்கத்துக்கும் தொழிலாளிக்கும் இடையேயான நெருக்கமான உறவு அறுத்தெரியப்படுகிறது.

இப்புதியமசோதாவின் செக்—ஆப் முறையின் காரணமாக, தொழிலாளி தான் விரும்பிய சங்கத்தை ரகசிய வாக்கெடுப்பு மூலம்தேர்ந்தெடுக்கும் உரிமைகுழிதோண்டி புதைக்கப்பட்டு விட்டது; வெகு சாதாரணமான—அனைவராலும் ஏற்கக்கூடிய ரகசிய வாக்கெடுப்பு எனும் ஜனநாயக முறையைக்கூட பாசிச ராஜீவ் கும்பல் பிடுங்கி எறிந்து விட்டது.

செக்-ஆப் முறையிலான விகிதாச்சாரத்தின்படி அந்தந்த சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பேச்சுவார்த்தைக்கான கவுன்சிலை அந்தந்த தொழில் நிலையத்தில் அரசும் நிர்வாகமும் நிறுவும். இந்த கவுன்சில்தான் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்போது வேலை நிறுத்தத்தில் இறங்கினால் அது சட்டவிரோதமாக அறிவிக்கப்படும். வேலை நிறுத்தத்தை தனியொரு சங்கம் அறிவித்தாலும் அது சட்ட விரோதம். இக் கவுன்சிலின் 75 சதவீத பெரும்பான்மை ஆதரித்தால்தான் அது ஏற்கப்படும்.

—ஆக, வெள்ளைக்காரன் 1947ம் ஆண்டின் தொழிற்தகராறு சட்டத்தில்கூட வேலை நிறுத்தத்தை தடை செய்யாததை, 'சுதந்திர' இந்தியாவின் பாசிச பிரதமர் ராஜீவின் ஆட்சி சட்டபூர்வமாகவே தடை செய்யத் துணிந்துள்ளது.

இதன்படி சட்டவிரோத வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளியை குறைந்தபட்சம் 14 நாளும் அதற்கு மேலும் 3 மாதம் வரை சிறையிலடைக்கவும் கூடவே அபராதம் விதிக்கவும் அரசுக்கு உரிமை உண்டு. மொத்தத்தில் இச்சட்டத்தைக் கொண்டு மத்திய—மாநில அரசுகள் எந்த போராட்டத்தையும் சட்டவிரோதமாக அறிவிக்கலாம். முன்னணித் தொழிலாளிகளைப் பழிவாங்கலாம். சிறையிலடைக்கலாம்.

இது தவிர, குறிப்பிட்ட நிறுவனத்தைச் சாராத வெளிநபர்கள் இருவருக்குமேல் வாழியர் சங்கத்தின் நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கக்கூடாது. மேலும் இத்தகைய ஊழியரல்லாததொழிற்சங்கவாதிகள் ஏழு சங்கங்களின் நிர்வாகக் குழுவுக்குமேல் அங்கம் வகிக்கவும் கூடாது. இது ஒருபுறமிருக்க மத்திய—மாநில மந்திரிகள் யாரும் தொழிற்சங்கத் தலைவராக முடியாது. சட்டவிரோத வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு அங்கீகாரம் மறுக்கப்பட்ட ஒரு தொழிற்சங்கத் தலைவர் மீண்டும் அத்தொழிற்சாலைக்கு சங்கத் தலைவராக வர முடியாது.

மொத்தத்தில் தொழிலாளி தான் விரும்பும் தொழிற்சங்கவாதியை சங்கத்தலைவராகவோ, செயலாளராகவோ தேர்ந்தெடுக்க உரிமையில்லை. தொழிலாளிகள் தம் விருப்பம்போல் ஒன்றுசேர்ந்து சங்கம் அமைக்கவும் உரிமையில்லை. வேலை நிறுத்தம் செய்ய அடிப்படை உரிமையுமில்லை. சாராம்சத்தில் தொழிலாளியைக் கொத்தடிமையாக்கும் கருப்பு மசோதாவே இது.

ஏற்கனவே தொழிலாளியின் தலைக்குமேலே தொங்கும் கத்திக



படிப்பகம்

www.padippakam.com

ளாக தேசியப் பாதுகாப்புச் சட்டமும், அத்தியாவசியப் பணித் துறைச் சட்டமும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. இதுவும் போதாது என்று அகமதாபாத் தொழிலாளர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏவியது பாசிச கும்பல். இப்போது நாடு முழுவதுமுள்ள அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட 22 கோடி தொழிலாளி வர்க்கத்தை உரிமைகளற்ற அடிமைகளாக்க இன்னுமொரு பாசிச மாசோதாவைக் கொண்டு வந்துள்ளது. வழக்கம் போல தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையே நடுநிலை வகிப்பதாகக் காட்டிக் கொள்ள, முதலாளிகள் கதவடைப்பு செய்தால் அது சட்டவிரோதமாகக் கருதப்படும் என்ற விதியையும்இம் மசோதாவில் சேர்த்து கொண்டு நாடகமாடுகிறது பாசிச கும்பல்.

தொழிற்சங்க புரோக்கர்களின் அடிமடியில் கை வைப்பதால் விதிவிலக்கின்றி எல்லா தொழிற்சங்க வாதிகளும் இக் கருப்பு மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆனால் எதிர்ப்புகளைக்கணக்கில் கொண்டு விதிமுறைகளைச் சற்றே தளர்த்துகிறோம்; தேச நலன் கருதியும் தொழில் அமைதி காணவும் ஆதரியுங்கள் என்று பாசிச கும்பல் பசப்பும்போது ஓடிப்போய் ஆதரிக்கவும், இன்னும் சில விதிகளைத் தளர்த்துங்கள் என்று கெஞ்சவும் இத் துரோகிகள் தயங்க மாட்டார்கள். வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகள் இத்தகைய துரோகிகளை இனங்கண்டு முறியடிப்பதன் மூலமே தங்களது உரிமைப்போரை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இது ஏதோ தொழிலாளி சம்பந்தப்பட்ட விவகாரம் என்று உழைக்கும் மக்கள் ஒதுங்கியிருக்க முடியாது. அடுத்தடுத்து கருப்புச் சட்டங்களைக் கொண்டு வந்து ஆட்டம்போடும் பாசிச கும்பல் நாளை அனைத்து மக்கள் மீதும் பாய்ந்து குதறவும் தயங்காது. பெருகிவரும் பாசிச அபாயத்தை உணர்ந்து இன்றே இப்பொழுதே உழைக்கும் மக்கள் ஆர்த்தெழ வேண்டும்.

இல்லையேல், "நாஜிகள்முதலில் கம்யூனிஸ்டுகளை நரவேட்டையாடினர். நான் வாய் திறக்கவில்லை; ஏனெனில் நான் கம்யூனிஸ்ட் அல்ல. பின்னர் யூதர்களைத் தாக்கினர்; நான் யூதன் அல்ல; எனவே அதைக் கண்டு கொள்ளவில்லை. பிறகு தொழிற் சங்கங்களைத் தாக்கினர். நான் அக்கறைப்படவில்லை.

இப்போது அவர்கள் என்னையே தாக்குகிறார்கள். ஆனால் எனக்காக வாய்திறக்க இப்போது யாருமே இல்லை" என்ற நாஜிகளின் கொடிய பாசிச அடக்குமுறையைச்சித்தரிக்கும் இக்கூற்று இந்தியாவிலும் மீண்டும் உயிர் பெற்றுவிடும்!

● மனோகரன்

## அடக்குமுறை-பொய் வழக்குகளால் புரட்சியாளர்களின் உறுதியைக் குலைக்க முடியாது!



சரியாக இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு குடமுருட்டி குண்டு வெடிப்பைக் காரணம் காட்டி மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புத் தோழர்கள் மீது தாக்குதல் தொடுத்தது பாசிச எம்ஜிஆர் தலைமையிலான தமிழக போலீசு. 2 கோடி ரூபாய் செலவில் தஞ்சை—திருவையாற்றில் தென்னிந்திய கலாச்சார மையம் என்ற பெயரில் நிலப்பிரபுத்துவ—பார்ப்பனீய கலாச்சாரத்தைப் பரப்புவதற்காக வந்த பாசிச ராஜீவைக் கொல்லவே இத் தோழர்கள் குண்டு வைத்ததாக கதை கட்டி விற்றது போலீசு கும்பல். தேடுதல் வேட்டை என்ற பெயரில் தோழர்களின் வீடு புகுந்து சூறையாடி கைது செய்து சிறையிலடைத்து பீதியூட்டியும் அச்சுறுத்தியும் செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்ள நிர்ப்பந்தித்தது. தோழர்களின் உறுதியைக் கண்டு பின்வாங்கிய போலீசு கும்பல், திருவையாறு, திருவோணம் ஒன்றிய வி.வி.மு. அமைப்பாளர்கள் தோழர்கள் ஜெயசீலன், இராமதுரை மாணிக்கம் ஆகியோர் மீது பொய் வழக்கு ஜோடித்தது.

இடைப்பட்ட இரண்டாண்டு காலத்திற்குள் 100க்கும் மேற்பட்ட பொய் சாட்சிகளை போலீசு கும்பல் தயாரித்துக் கொண்ட பிறகு இப்போது வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்துள்ளது. வழக்கு மன்ற வளாகத்தில் போலீசைக் குவித்தும், ரகசியப் பிரிவு 'கியூ'பிராஞ்ச்-போலீசை கொண்டு வந்து நிறுத்தி பீதியூட்டியும் கெடுபிடி செய்த போதிலும், எஃகுறுதி மிக்க தோழர்கள் இருவரும் புரட்சி முழக்கங்கள் எழுப்பியவாறு தஞ்சையில் கடந்த 22ந் தேதியன்று துவங்கிய விசாரணைக்கு வந்தனர்.

இதே வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட தமிழரசன் குழுவைச் சேர்ந்த மணிநாதன் வழக்கில் அப்ரூவராகியிருக்கிறார். விசாரணையில் தோழர்கள் ஜெயசீலனும், துரைமாணிக்கமும் குடமுருட்டி குண்டு வெடிப்புக்கு உடன் இருந்து உதவிசெய்ததாக மணிநாதன் வாக்குமூலம் அளித்துள்ளார் இந்த பொய் சாட்சிக்கு 'செட்-அப்' செய்த போலீசு கும்பலின் புலனாய்வு அதிகாரியே கோர்ட் அறைக்குள்ளே சட்ட விரோதமாக அமர்ந்திருக்க, எரிச்சலடைந்த மாஜிஸ்டிரேட் அவரை வெளியேற்றியிருக்கிறார்.

பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் 'தனித் தமிழ்நாடு' காணபுறப்பட்ட தமிழரசன் குழுவின் வீரர்கள் இப்போது போலீசின் சித்ரவதை அடக்குமுறைகளுக்கு அஞ்சி கோழைகளாகி அப்ரூவர்களாக மாறி சரணடைந்து கிடக்கின்றனர் ஆனால் மக்கள் திரள் வழியில் புரட்சியை மலர்விக்கப் புறப்பட்ட வி.வி.மு தோழர்கள் அடக்குமுறையைக் கண்டு அஞ்சி நடுங்காமல் போலீசு கும்பலின் மோசடியை எதிர்த்து உறுதியாக நிற்கின்றனர். அவ்வாறு, அடக்குமுறை, பொய் சாட்சிகள் மூலம் புரட்சியாளர்களைப் பணிய வைக்கவோ, விலைக்கு வாங்கவோ ஒருக்காலும் முடியாது என்பதை தோழர்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



# அச்சுறுத்தலுக்கு அடிபணியாத ஆசிரியர்-அரசு ஊழியர் போராட்டம்

அரசு அலுவலகங்கள் செயலிழந்து கிடக்கின்றன; பள்ளிகளும் கல்லூரிகளும் மூடிக் கிடக்கின்றன. தமிழகத்தில் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் இணைந்து நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டம் ஆளுநர் ஆட்சியைக் கிலியூட்டியுள்ளது.

அரசு ஊழியர்—ஆசிரியர் சங்க முன்னணியாளர்களையும் தலைவர்களையும் கைது செய்தும் அரசு அலுவலகங்களில் போலீஸைக் குவித்து மிரட்டியும், பணி நடத்தை அடக்குமுறைச் சட்டத்தை ஏவியும், துரோக சங்கங்கள் மூலம் கழுத்தறுத்தும் போராட்டத்தை அடக்கிவிடப் பார்த்தார்கள். ஆனால் அவர்களது முயற்சிக்கு எதிரான விளைவுகளே தோன்றியுள்ளன. தமிழகம் முழுவதும் ஆசிரியர்—அலுவலர் போராட்டத்தை ஆதரித்து கல்லூரி ஆசிரியர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். இன்னும் சிவில் சப்ளை, மாநகராட்சி, அமைச்சகப் பணித்துறை, கோர்ட்டுகள், ஏன், போலீஸ்துறைஊழியர்களும் கூட ஆதரவாகக் களத்தில் இறங்கியுள்ளனர். மாவட்ட, வட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்முன் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்கின்றனர்.

தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 80 சதவிதத்துக்கும் மேலான அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இன்றுவரை பணிக்குத் திரும்பவில்லை. அரசுப் பணிகள் முற்றாக முடங்கிக் கிடக்கின்றன. ஆனாலும் கேலிக்குரிய முறையில்—பாசிஸ்டுகளுக்கே உரிய பாணியில் வானொலியிலும் வானொளியிலும் 'அரசுப் பணிகள் ஓரளவே பாதிக்கப்பட்டுள்ளன; ஊழியர்கள் வேலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்' என்று புளுகித் தள்ளுகிறது அலெக்சாண்டர் அரசு.

மத்திய அரசு ஊழியருக்கு இணையாக ஊதியம் தரப்பட வேண்டும்; ஒரு மாத சம்பளம் போனசாக கொடுக்கப்படவேண்டும்; ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக்குழு விதிப்படி ஊதியம் தரப்பட வேண்டும். மருத்துவ செலவுப்படி வேண்டும்—முதலான கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் போராடுகின்றனர். சமீபத்தில் தமிழகத்துக்கு திக்விஜயம் செய்த பாசிசப் பிரதமர் ராஜீவ் தமிழக மக்கள் தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். அதைத்தான் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் கோருகின்றனர். மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு வெவ்வேறு சம்பள விகிதம் என்று ஏன் வேறுபடுத்தவேண்டும்? ஒருங்கிணைந்த ஒரே சம்பளவிகிதம் என்று தேசிய ஒருமைப்பாட்டை, தேசீய நீரோட்டத்தை உருவாக்க வேண்டியதுதானே?

'அதெல்லாம் முடியாது இந்தா பிடி 70 ரூபாய் இனாம்; ஒழுங்காக வேலைக்குத் திரும்பு' என்று மிரட்டுகிறது அரசு. ''எல்லாவற்றையும் மீறி இதுவரை எந்த அரசும் கொடுத்திராத அளவுக்கு எழுபது ரூபாய் இடைக்கால நிவாரணமாகக்கொடுத்துள்ளோம் இதற்குமேல் சல்லிக்காசு தரமுடியாது. அரசுக்கு இதனால் ஏரார்ளமாக பற்றாக்குறை—இழப்பு ஏற்பட்டுள்ளது. இனியும் சலுகை காட்டமுடியாது என்று வானொளியில் தோன்றி நியாய வாதங்களை அடுக்கிறார் தலைமைச் செயலர். கஜானாவில் காசே இல்லை என பித்தலாட்டம் செய்யும் அதே வேளையில்தான் தமிழகமுதலாளிகளுக்கு இரண்டாவது தவணையாக வரிச் சலுகைகளை வாரி வழங்கியது கவர்னர் ஆட்சி. மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை பெருக்குவதற்காக இது மிக அவசியம் என்று பசப்புகிறது.

கொள்ளையும் கொடுத்து கொம்பையும் ஓங்கும் முறையிலேயே, எழுபது ரூபாய் இடைக்கால நிவாரணம் கொடுத்துவிட்டு, பணிக்கு திரும்பாத ஊழியர்கள் மீது வழக்கு தொடுப்பது, விளக்கம் கோரும் நோட்டீசு கொடுத்து தற்காலிக பணிநீக்கம் செய்வது, ஊழியர்களின் தனிக்கோப்புகளில் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டவர் என்று கருப்பு புள்ளி வைப்பது, தற்காலிக ஊழியரை உடனடியாக பணிநீக்கம் செய்திருப்பது, போராடும்ஊழியர்களைக் கைது செய்து சிறைவைப்பது, ஊர்வலம், பொதுக்கூட்டம்நடத்த தடை என்று அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டு கொக்கரிக்கிறது ஆளுநர் ஆட்சி. ஒருதலைமுறைக்கும் மேலாக மத்திய அரசு ஊழியருக்கு இணையான ஊதியம் தரப்பட வேண்டும் என்று கோரி வருவதை சுட்டிக் காட்டியும், இதர தென் மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்கத்தில்தான் ஆசிரியர்களுக்கு மிகக் குறைவான ஊதியம் தரப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியும்கூட சம்பளக்கமிஷன் நியமித்து இவற்றை சிபாரிசு செய்ய மறுக்கிறது அரசு.

தங்கள் கோரிக்கைகள் ஏற்கப்படாத நிலையில் ஜூன் 27 முதல் மறியலும், சம்பள நாளான 29 அன்று உண்ணாவிரதமும் மேற்கொள்ளப் போவதாகபோராடும் ஆசிரியர்களும் அலுவலர்களும் அறிவித்துள்ளனர். இதுவரை கண்டிராதவாறு மிகப் பெரிய, பரந்து விரிந்த அளவிலும் உறுதி, ஒற்றுமையுடனும் தொடர்ந்து வருகிறது ஆசிரியர்—அரசு ஊழியர். போராட்டம். வழக்கம் போலவே இதுவரை ஒதுங்கிக் கிடந்த ஓட்டுக் கட்சிகள் போராட்டம் வலுப்பெற்றவுடன் வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கின்றன.

**ஆளுநராட்சியைக் கதிகலங்க வைக்கும் நியாயமானபோராட்டம்** தான். ஆனாலும் போராடும் ஆசிரியர்களுக்குக் காட்டும் தார்மீக ஆதரவை அரசு ஊழியர்களுக்குப் பரந்துபட்ட மக்கள் காட்டுவதில்லை. அரசு ஊழியர்மத்தியில் புரையோடிப் போயுள்ள லஞ்ச ஊழல் எனும் மக்கள் விரோத



படிப்பகம்

www.padippakam.com

போக்குதான் இதற்குக் காரணம். போராடும் சங்கங்கள் அரசு ஊழியர்களிடம் இதற்கெதிராகப் போராடாதவரை இப்பிரச்சினை தீராது. மேலும் ஆசிரியர்களுக்கு ஆதரவாக மாணவர்கள் போராடாமல் இருப்பதும் ஆசிரியர் — மாணவர்களுக்கு இடையே நெருக்கமான உறவு இல்லாததையே காட்டுகிறது. தனிக் கல்விப் பயிற்சி—டியூஷன் என்று பணம் பிடுங்குவது, பொறுப்பாக வகுப்பெடுக்காமல் மாணவர்களைத் திண்டாடவிடுவது முதலான போக்குகள் ஆசிரியர்களை மாணவர்களிடமிருந்து அந்நியப்படுத்தியுள்ளது. அதுவும் கேடுகெட்ட புதிய கல்விக் கொள்கைக்கு எதிராகப் போராடி முறியடிக்க வேண்டிய இந்நேரத்தில் மாணவர்—ஆசிரியர் ஒற்றுமையை உருவாக்க வேண்டியது மிக அவசியமான ஒன்று.

உறுதியுடனும் ஒற்றுமையுடனும் முன்னேறி வரும் இப்போராட்டத்திற்குத் தலைமையேற்கும் போலிக் கம்யூனிஸ்டு சார்பு சங்கம் இறுதி வரை போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமா என்பதே சந்தேகம்தான். இது வெறும் ஆரூடமல்ல; போலிக் கம்யூனிஸ்டுத் தலைமை எதிர்மறையில் கற்றுக் கொடுத்த அனுபவ பாடம். ஏற்கெனவே கடந்த ஆண்டு அனைத்திந்திய அளவில் நடந்த கல்லூரி ஆசிரியர் போராட்டத்தின்போது ஒரு பிரிவு தலைமை, போராட்டத்தை திடீரென வாபஸ் பெற்றுக் கொண்டு துரோகமிழைத்தது. போராடும் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் விழிப்போடிருந்து இத்தகைய துரோகத்தனத்தை முறியடிக்க வேண்டும்.

ஆசிரியர்—அரசு ஊழியர் போராட்டம் எவ்வளவு தீவிரமானதாக இருப்பினும் பொருளாதார சலுகைகளுக்கான குறிப்பிட்ட வரம்புக்குட்பட்ட போராட்டமாகவேஉள்ளது இப்போராட்டத்தினால் அரசுப் பணியும் கல்விப் பணியும் பாதிக்கப்பட்டு மக்கள் திண்டாடுகின்றனர் என்று மக்கள் விரோத அரசு மக்களுக்காகப் பரிந்து பேசிக் கொண்டு நியாய வாதங்களை முன்வைக்கும்போது, போராடும் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் தொழிற்சங்க வட்டத்துக்குள் தம்மை சுருக்கிக் கொள்வது விவேகமானதாக இருக்காது. விரிந்த தொலைநோக்கு அரசியல்—அமைப்பு பார்வையுடன் அனைத்து பிரிவு உழைக்கும் மக்களுடன் போராட வேண்டும். இன்றைய போராட்டத்தில் வெற்றி பெறவும் போராட்டப் பலன்களைக் காத்திடவும் இது மிக அவசியம்.

❋ பாலன்

# மார்க்சிஸ்ட் குண்டர்களின் ரௌடித்தனம்!

ரௌடித்தனத்துக்கும் அராஜகத்துக்கும் பேர்போன காங்கிரசின் குண்டாந்தடி ஆட்சிக்கு சரியான மாற்று நாங்கள்தான் என்று மார்தட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்த 'மார்க்சிஸ்ட்' கட்சி, ஒரு தலைமுறைக்குள்ளாகவே தன்னையும் ஒரு குண்டர்படை கட்சி என்பதை சமீப காலமாக நிரூபித்துக் கொண்டு வருகிறது. ஆட்சியதிகாரத்திலிருக்கும் ஆணவத்தால் ரௌடியிசத்தைக் கொள்கையாகவும், குண்டர்களை கட்சியின் முன்னணி செயல் வீரர்களாகவும் கொண்டு அப்பாவி மக்களைக் கடித்துக் குதறிய 'மார்க்சிஸ்டுகள்' இன்று, ஆளும் கூட்டணியிலுள்ள தமது தோழமைக் கட்சியினர் **மீதே குண்டு வீசித் தாக்கத் துணிந்து விட்டனர்.**

மே. வங்கத்தின் மித்னாபூர் மாவட்டத்திலுள்ள காரக்பூர் ரயில்வே யார்டு இந்தியாவிலேயே மிகப் பெரியது. இங்கு கூட்ஸ் வேகன்களை உடைத்துக் கொள்ளையடிப்பதும், ரயில்வேயின் இரும்புக் கனிமங்கள், சாதனங்களைத் திருடுவதுமான தொழிலை ஒரு சமூக விரோத கும்பல் 'மார்க்சிஸ்ட்' கட்சி ஆதரவுடன் நீண்ட காலமாக நடத்தி வந்தது. இத்தொகுதியின் எம்.பி.யும், வலது கம்யூனிஸ்டு கட்சித் தலைவருமான நாராயண் சௌபே காரக்பூரில் சமூக விரோதிகளால் ரயில்வே துறைக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார். ரயில்வே மந்திரி மாதவராவ் சிந்தியாவும் இது உண்மை என்று உறுதிப்படுத்தி விரைவில் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

இதனால் ஆத்திரமடைந்த 'மார்க்சிஸ்ட்' ரௌடிகள் சௌபேயைப் பூண்டோடு ஒழிக்கத் திட்டமிட்டனர். அவர் கிடைக்காமல் போகவே அவரது மகன் கௌதம் சௌபேயை பயங்கர ஆயுதங்களால் மிருகத்தனமாகத் தாக்கி மண்டையைப் பிளந்து முதுகெலும்பை முறித்தனர். மருத்துவமனையில் பதினெட்டு தையல்கள் போடப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார், அவர்.

இச்சம்பவத்தையடுத்து 'மார்க்சிஸ்ட்' அரசு யார்மீதும் வழக்கு தொடுக்கவில்லை. வலது கம்யூனிஸ்டுகளோ நிராதரவாக நின்றனர். அரசின் ஆதரவு தங்களுக்கே என்பதை அறிந்து கொண்ட 'மார்க்சிஸ்ட்' ரௌடிகள் அதன்பிறகு தொடர்ச்சியாக வலது கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களைத் தாக்கத் தொடங்கினர்.

அய்மா நகரில் ஏப்ரல் 25 முதல் 30 வரை வலது கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களும் அவர்களின் வீடுகளும் தாக்கப்பட்டன. 'மார்க்சிஸ்ட்' ரௌடிகளின் அட்டூழியங்களுக்குப் பயந்து பகுதி வாழ் மக்கள் அய்மா போலீஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்தனர். ஆனாலும் இடது முன்னணி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தத் தாக்குதல் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும்போதே மறுபுறம் கலய்கோண்டா அருகே வலது கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களின் வீடுகள்மீது 'மார்க்சிஸ்ட்' ரௌடிகள் குண்டு வீசித் தாக்கினர். எல்லாவற்றுக்கும் மேலாக நாராயண் சௌபே வீட்டின்மீதே ஏப்ரல் 27 அன்று நள்ளிரவில் குண்டு வீசப்பட்டது. அரண்டு போன சௌபேயின் துணைவியார் கௌரி, வலது கம்யூனிஸ்டு கட்சியிடம்போய் முறையிட்டும் எந்த உதவியும் கிடைக்காத நிலையில் காங்கிரசிடம் போய் தஞ்சம் புகுந்தார். காரக்பூர் அரசு மருத்துவமனை ஊழியரான அவர். ஊழியர் சங்கத்துக்கும் தலைவராக இருந்து வந்தார். இப்போது **காங்கிரசுக்கு கட்சி மாறி அக்கட்சியின் தலைமையிலான ஊழியர்**

**'மார்க்சிஸ்டு'களின் ரௌடித்தனத்துக்கு அஞ்சி காங்கிரசுக்கு கட்சி மாறிய வலது கம்யூனிஸ்ட் எம்.பி.யின் மனைவி, கௌரி.**





படிப்பகம்

www.padippakam.com



வலது கம்யூனிஸ்டு
எம்.பி. நாராயண் சௌபே

சங்கத்துக்கும்தலைவராகிவிட்டார் "நான் 30 ஆண்டு இடதுசாரி இயக்கத்தில் இருந்திருக்கிறேன். ஆனால் கிரிமினல்களுடன்தோள் மீது கை போட்டுக் கொண்டு 'தோழரே!' என்று வெட்கமில்லாமல் கொஞ்சிக் குலாவுவதை ஒரு போதும் பார்த்ததில்லை" என்று 'மார்க்சிஸ்டு'களின் முகத்தில் காறி உமிழ்கிறார்.

இதற்கிடையே ஹரன் கோட்லா என்ற 'மார்க்சிஸ்ட்' ரௌடி, தனதுகுண்டர்படையுடன் வலது கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களின் வீடுகளைத் தாக்கி தீ வைத்துக் கொளுத்தியபோது ஆத்திரமுற்ற கிராம மக்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டான். மாண்டு போன கோட்லா தமது ஆதரவாளன் என்று 'மார்க்சிஸ்டுகள்' வெளிப்படையாக அறிவித்து கொள்ளாவிட்டாலும், இக்கொலையைத் தூண்டியது சௌபேயின் மகன்தான் என்று கூறிக்கொண்டு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சௌபே குடும்பத்தினரை மிரட்டி வருகின்றனர்.

இதன் உச்சகட்டமாக மே முதல் நாளன்று 'மார்க்சிஸ்ட்' தலைவர்களான காளிநாயக், ஜதின் மித்ரா, சன்சால் சக்ரவர்த்தி ஆகியோர் தலைமையில் ஆயுதமேந்திய ரௌடிக் கும்பல் 'வேண்டும் வேண்டும்! சௌபே குடும்பத்தாரின் தலைகள் வேண்டும்' என்று ரத்தவெறியோடு காரக்பூரில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. இத்தனைக்கும்பிறகும் வலது கம்யூனிஸ்டுகள் தொடை நடுங்கிக் கொண்டு, 'மார்க்சிஸ்டு'களைப் பகைத்துக் கொண்டால்பதவிசுகம் பறிபோய் விடுமோ என்ற பீதியில் காலிடுக்கில் கைகளை நுழைத்துக் கொண்டு சமரசம் பேசுகின்றனர். "நான் வலது கம்யூனிஸ்ட் கட்சியில் இருப்பதில் பெருமிதம் அடைகிறேன். ஆனால் என் மனைவி காங்கிரசில் சேர்ந்ததை நான் ஆதரிக்க முடியாது" என்று தன்னிலை விளக்கம் கொடுக்கிறார் நாராயண் சௌபே. வலதுகளோ 'மார்க்சிஸ்டு'களுடன் மோத தைரியம்இல்லாமல் சௌபேயின் மனைவி கௌரியின் செயல்பாடுமீது விமர்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

வடக்கே வங்கத்தில் தலைவிரித்தாடும் 'மார்க்சிஸ்டு'களின் ரௌடித்தனம் இப்போது தெற்கே கேரளாவிலும் பரவி வருகிறது. ஏற்கெனவே கடந்த ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிதேர்தல்களின்போது வலதுகளும் 'இடது'களும் ஓட்டுக்கும் சீட்டுக்கும் மோதிக் கொண்டனர். இப்போது கொல்லம், எர்ணாகுளம், திருச்சூர் மாவட்டங்களில் பகிரங்கமான தெருச்சண்டையாக தீவிரமாகிவிட்டது சமீபத்தில் வலதுகள் மதுமரத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலிக்கான போராட்டத்திற்கு தலைமையேற்று வெற்றி பெற்றதும், இது 'மார்க்சிஸ்டு' அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தும் விவகாரம் என்று கூறிக் கொண்டு வலதுகளின் செல்வாக்கை முறியடிக்க 'மார்க்சிஸ்டுகள்' ரௌடித்தனத்தில் இறங்கியுள்ளனர்.

கள்—சாராயக் கடைகளுக்கு அரசு மீண்டும் ஏலம் விட வேண்டும்; அதன்மூலம் மதுமரத் தொழிதொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு பெருகும் என்றும் 1981ல் தீர்மானித்த குறைந்தபட்ச கூலியை அரசு நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும் வலதுகள் போராட்டம் நடத்தினர். ஆனால் 'மார்க்சிஸ்டு' மந்திரி கே.ஆர். கௌரி அம்மாள் இக்கோரிக்கையை திட்டமிட்டே புறக்கணித்துவிட்டார். மறுபுறம் 'மார்க்சிஸ்ட்' குண்டர்கள் வலதுகளின் அணிகளைப் பந்தாடுகின்றனர். இதோடு 'இடதுசாரி' கூட்டணியிலுள்ள வலது கம்யூனிஸ்ட் மந்திரிகளின் துறைகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யாமல் 'மார்க்சிஸ்டுகள்' கள்' காலை வாரி விடுகின்றனர். 'மார்க்சிஸ்டு'களின் அராஜகத்தால் உதைபட்டுச் சாகும் வலதுகள் இந்த விவகாரங்களை வெளியே சொல்லவும் முடியாமல், சகித்துக் கொள்ளவும் முடியாமல் தேள் கொட்டிய திருடனாகத் தவிக்கின்றனர்.

தமது கூட்டணிக் கட்சியினரை விலைக்குவாங்கிப் பணிய வைக்கும் காங்கிரசு ரௌடிகளையே விஞ்சும் வண்ணம், ரௌடித்தனத்தின் மூலமே கூட்டணிக் கட்சியினரை அழித்தொழித்துப் பணிய வைக்கும் 'மார்க்சிஸ்டுகள்', உண்மையிலேயே காங்கிரசு தேசிய 'மாற்று' என்பதை நிரூபித்துக் காட்டி விட்டார்கள்.

● குமார்

## சாதிய வன்முறை வெறியாட்டம்!

புதிய ஜனநாயகம் மே 16—31 இதழில், சாதிய மோதலுக்கு வன்னியர்களும் ஓட்டுக்கட்சிகளும் செய்துவரும் சதியைக் குறிப்பிட்டு எழுதியது, நிருபணமாகி வருகிறது. எந்தவொரு ஓட்டுக் கட்சி கூட்டம் நடத்த முற்பட்டாலும் வன்னியர் சங்கத்தால் தடுக்கப்படுகிறது. செந்துரை பகுதியில் அதிமுக கூட்டம் இப்படித்தான் தடுக்கப்பட்டது. பின்னர் ஜூன் 6ந்தேதியன்று ஜெயங்கொண்டத்தில் திமுகவினர் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர். அதைத் தடுக்க வன்னியர் சங்கத்தினர் எவ்வளவோ முயற்சிகள் செய்தனர். ஆனாலும் திமுகவினர் அப்பகுதி 'அரிசன' மக்களைத் தூண்டிவிட்டு போலீஸ் காவலுடன் கூட்டத்தை நடத்தினர். அதனால் கோபமுற்ற வன்னிய சங்கத்தினர் மின் கம்பிகளில் சைக்கிள் செயினைப்போட்டு மின்சாரத்தை நிறுத்தினர். கூடியிருந்த மக்களை அடித்து விரட்டினர். கடைகளை உடைக்க முற்பட்டனர். சாலைகளில் சோடாபாட்டில்களை உடைத்துப் போட்டனர். ஒருவராலும் வெறுங்காலுடன் சாலையில் நடக்க முடியவில்லை.

இதையடுத்து மீண்டும் 13ந் தேதியன்று வாரியங்காவல் பகுதியில் திமுக கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இம்முறை வன்னியர் சங்கத்தினர் கத்தி கம்புகளுடன் சென்று மக்களை விரட்டினர். சாலைகளில் தடைகளை ஏற்படுத்தியும், தீவைத்துக் கொளுத்தியும் போலீஸ் வரமுடியாதபடி செய்தனர். வழக்கம் போலவே மின் கம்பிகளில் சைக்கிள் செயினைப்போட்டு மின்சாரத்தை துண்டித்தனர். கூட்டத்தை ஏற்பாடு செய்த அந்த ஊர் பஞ்சாயத்து தலைவருக்கு சொந்தமான சினிமா கொட்டகையின் கீற்றைப் பிய்த்தெறிந்து போட்டு தீ வைத்தனர்.

வன்னியர் சங்கத்தினரோ **சாதியின் பெயரால் வன்முறையை** கட்டவிழ்த்து விடுகின்றனர். ஓட்டுக் கட்சிகளோ 'அரிசன' மக்களை அதற்கெதிராகத் தூண்டிவிட்டு குளிர்காய்கின்றனர். இருவரது சதிக்குப் பலியாகி உயிரிழப்பது சாதாரண ஏழைகள்—உழைக்கும் மக்கள் தான். இந்த உண்மையை விளக்கியும், புதிய ஜனநாயகம் இதழைக் கொடுத்தும் இப்பகுதி வன்னிய சங்க இளைஞர்களிடம் விவாதித்தோம். முதலில் மறுத்தாலும் நியாயத்தை உணரவே செய்தார்கள்.

அலெக்சாண்டர், அரியலூர்


ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094.

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM R.N. 42048/85 Regd. No. TN/MS(C)

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



கண்கள் நிலைகுத்திப் போயுள் ளன. நுகத்தடியின் கீழே சிக்கிக் கொண்டு, உழவு மாடுகளின் கழுத்துக்குக் கீழே கோரமான முறையில் மாண்டு போயுள்ளான் இந்த ஏழை விவசாயி, அவனுக்கு வாழ்வளித்த, அவன் பிரியமோடு நேசித்த உழவு மாடுகளும் அவன் மீதே விழுந்துமடிந்துபோயுள்ளன. எப்படி நேர்ந்தது இந்தக் கோர முடிவு?

இவன்பீகார் மாநிலம் பாட்னா மாவட்டம் கரன்பூர் கிராமத்து ஏழை விவசாயி. பலநாள் வறட்சி பட்டினியிலே வாடிக் கிடந்தவன். முதல் நாள் பெய்தகொஞ்ச மழை அவனது ஆசையைக் கிள்ளி விட்டது. நம்பிக்கை துளிர்த்தது. அடுத்த நாள் உழவு மாடுகளுடன் வயலுக்குப் போனான். எரிக்கும் வெய்யிலில் மாடுகளோடு காய்ந்து உழுது கொண்டிருந்தான். திடீரென்று வானம் கருத்தது வானம் பொத்துக் கொண்டது போல மழை கொட்டியது. மழையையும் வெய்யிலையும் பார்த்து ஒதுங்கி நின்று ஓய்வெடுத்துக் கொண்டா நம் விவசாயிகள் உழைக்கிறார்கள்! திடீரென்று மின்னல் வெட்டியது. இடிதாக்கியது. எந்த மண்ணிலே வெயில்—மழை பாராது, இரவு—பகல் பாராது அந்த ஏழை விவசாயி உழைத்தானோ அந்த மண்ணிலேயே மாண்டு போனான். அவனுடைய உற்ற உறுதுணையாயிருந்த உழவு மாடுகளும் மாண்டு போயின.

அந்த நாளில் பீகார் தலைநகர் பாட்னாவில் இதோ இந்த இளைஞனுக்கு ''பீகாரின் பெருமை'' என்கிற பட்டத்துக்குரிய பட்டயம் வழங்கும் விழா நடக்கிறது. பட்டம் தருபவர்பீகார் முதல்வர் பகவத் ஜா ஆசாத். பட்டம் பெறும் இளைஞர் அவருடைய மகன் கீர்த்தி ஆசாத். ''பீகாரின் பெருமை'' என்ற பட்டம் பெறும் இந்த இளைஞன் பீகாருக்காக என்ன செய்தான்? இவனுடைய தந்தை சில மாதங்களுக்கு முன்பு பீகார் முதல்வரானார். அதுவரை இவன் பீகாருக்கு வந்ததே இல்லை. டில்லி நகருக்காக கிரிக்கெட் விளையாடியிருக்கிறான். கிரிக்கெட் போட்டிகளில் இந்தியாவுக்காக விளையாடியிருக்கிறான். தந்தை மாநில முதல்வர் ஆனதும் பீகாரோடு பூர்வீக உரிமை பாராட்டிக் கொண்டு அரசியல் வாரிசு ஆக்கப்படுகிறான்.

இடி, மின்னல் தாக்கி அந்த ஏழை விவசாயி மாண்டு போனதற்கு இவர்கள் காரணமில்லைதான். ஆனால் பீகாரின் மைந்தர்கள் அந்த மண்ணிலே உழைத்து அங்கேயே மாண்டு போகிறார்கள். இதோ பீகாரோடு சம்பந்தமே இல்லாதவர்கள் 'பீகாரின் பெருமை'க்கு உரியவர்களாகிறார்கள். இதுதான் நாட்டின் இன்றைய சமூக—அரசியல் கலாச்சாரம்! இது இன்னும் நீடிக்கலாமா?



படிப்பகம்